தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, கார்த்திகை 19 (5-12-'59). சனிக்கிழமை | இதழ் 25

வாழ்வைத் தருவோம்

வெற்றி! வெற்றி!

நாம் எதிர்பார்த்த வெற்றி!

அவர்கள் எதிர்பாராத வெற்றி!

நம் நெஞ்சு களிக்கும் வெற்றி!

அவர்கள் இதயம் வெடிக்கும் வெற்றி!

கடந்த தடவை நம்மை நேரடியாக எதிர்க்கத் திறனற்று எவரையோ, எப்படியோ நிறுத்தியோர் இந்தத் தடவை தாமே வரிந்து கட்டிக் கொண்டு வந்தனர். எண்ணரிய "திருவிளையாடல்களை" இந்தக் காங்கிரசார் சீடர்கள் செய்தனர். என்றாலும் குடியாட்சிப்பண்பு வென்றது.

கோல முழுமதியை மறைக்க முனைந்த காரிருள் கூட்டம், கரைந்து விட்டது!

புன்னகைப் பூங்காவைப் பொசுக்க முனைந்த, தீமனத்தார், வெற்றி அருவியின் புதுப்புனலிலே அணைந்து, அழிந்தனர்.

உவகைப் பண்பாடி உலகுக்கு அறிவித்துவிட்டார், கழகத்தோழர் அப்துல்காதர் பி. எஸ்சி., மாநகராட்சி மன்றத்தில் நாம் பெற்ற வெற்றியை.

கடமையும் கண்ணியமும் உணர்ந்து நிறைந்தோர், கட்டுப்பாட்டுடன் செயல்பட்ட பெருஞ்செயலைக் காட்டிவிட்டார் வெற்றி முழக்கும் தோழர் தேவராசன்.



மேயர் அப்துல் காதர் பி. எஸ்சி.



துணைமேயர் தேவராசன்.

வெள்ளுடை வேந்தரின் வழிவந்து வெற்றி வாகை சூடிய தோழர்களை வாழ்த்துகிறோம்; வாழ்க! வாழ்க!

★

பணமூட்டைகள் நம்முடன் மோதிப் பார்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றன! மக்கள் மக்களாட்சியில் வைத்திருக்கும் நம்பிக்கையை உடைத்து நொறுக்குவதே அவற்றின் தீராத ஆசை; ஓயாத பணி.

எழுந்துவரும் மக்கள் சக்தி, இந்த ஆசையை அடித்து நொறுக்கி, அடிக்கடி வெற்றி பெறுகிறது.

அதன் ஒரு கட்டம்தான் அண்மையில் முழங்கிய வெற்றிச் சேதி!

"கழகம் வெல்வதா? காங்கிரசார் நாங்கள் எதற்கிருக்கிறோம்? காசு-பணம் படைத்தோர் எங்கள் புறம் இருந்தும் பின் என்ன பயன்? வெற்றி முழங்காவிடின் நாங்கள் பிறந்தென்ன பயன்? இல்லை! இவ்வளவு கொள்ளைப்பணமும் இருந்தென்ன பயன்?" என்று பணப்பையைக் குலுக்கிக் கொண்டிருந்தனர் பலர். இந்தக் காட்சிகளைக் கண்டு திராவிட மக்கள் சிரிப்பாய்ச் சிரித்தனர். என்றாலும் ஆணவ வெறிபிடித்த பணமூட்டைகள் இரவு பகலென்று பாராது, அலைந்தனவாம் சென்னை நகரில். இத்தனை நிலைகளையும் கண்டு தாயகத் தொண்டர்கள் கலங்காது, சிதறாது, செயலே குறியாய் இருந்தனர்.

— 12-ம் பக்கம் —

தாழ்வை யழிப்போம்.

மதி குழம்பிப் புது வாதம்

கானல் வெளியில்... முத்துப் பந்தலாம்; இரத்தினக் கூடமாம்! நெருஞ்சிக்காட்டில்... களைப்பாற அழைக்கின்றூர் கன்னக்கோலார்! நம்பிக் கெடுவோர் நாமில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய விளக்கத்தை நம் மாற்றூர்கள் சரியானபடி புரிந்துகொள்ளவில்லை; புரிந்துகொள்ள முயலவில்லை; புரிந்துகொள்ள முடியவில்லை, அரசியல் அறிவிலே அவர்கள் மிகவும் தாழ்ந்திருக்கின்ற காரணத்தால்! கழகத்தின் அரசியல் சமுதாயப் பொருளாதாரக் கொள்கைகளை எல்லா வகையான வாய்ப்புகளிலும் நாம் விளக்கிடத் தவறவில்லை. மாற்றுக் கட்சியிலேயிருப்பவர்கள் தங்களின் குறைந்த அறிவிற்கு எட்டிய வகையில் முன்னேற்றக் கழகத்தை மதிப்பிட்டுள்ளார்கள். மாற்றுக் காரணங்களைச் சொல்லி விவாதிப்பதற்குப்பதிலாகத் தங்களின் வேதனையையும் வெறுப்பையும் மிக மிக மட்டமான வார்த்தைகளில் மிகப் பெரும் தலைவர்களும்கூடப் பயன்படுத்தியிருக்கிறூர்கள். எனில் எட்டிப் பாயும் தொண்டர்கள், பத்திரிகை ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, தம்பட்டம் தட்டுவோராக இருந்தாலும் சரி, தங்கள் தலைவர்களைத் தோற்கடித்துவிட்டுத்தான் எழுத்து நடையைக் காட்டுவார்கள்! அந்தத் தொண்டர்களைத் தானே தலைவரும் பாராட்டிப் போற்றுகிறூர்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை நேரத்திற்கு நேரம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஏமாறுகிறூர்கள். திருப்பத் திரும்பச் சொல்லும்போதும் தங்களுடைய சிந்தனைக்குள்ளே நுழைத்துக்கொள்ள முடியாதவர்கள் தங்களின் வழக்கமான தொழிலைப் போல் வாய்வீரம் காட்டுவார்கள்! முன்பெல்லாம் முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை முன்பக்கத்திலே எடுத்துப் போட்டு விவாதிப்பது வேண்டாத வேலையாக இருந்தது. ஆனால் இப்போதோ அதுவே சில கட்சிகளின் வேலைத்திட்டமாக இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற திங்கள் எட்டாம்நாள் மதுரையில் பேசும்போது சொன்ன கருத்துக்களை பம்பாய் நகரத்துப் பத்திரிகைகள்கூட வெளியிட்டு, "வளருகிற அறிகுறி, டில்லி ஆட்சிக்கு முடிவு கட்டும்" என்ற அச்சத்தினைக் கூறியிருக்கிறூர்கள்! சென்னை இருசப்பக் கிராமணித் தெருவிலே தமிழரசுக் கழகம் என்று ஒன்று இருக்கிறதே, அதற்கும் ஒரு தலைவர் இருக்கிறூர்; தொண்டர்கள் இருக்கிறூர்கள்; பத்திரிகைகள் இருக்கின்றன! சுயாட்சி மண்டபத்தின் இரும்புத் தூண்கள் அவர்கள் – அவர்களும் கருத்துக்களைச் சொல்லியுள்ளார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழர்களைத் தமிழர்கள் என்றும், ஆந்திரர்களைத் தெலுங்கர் என்றும், கேரளத்தவரை மலையாளிகள்என்றும் கன்னடத்தவரைக் கன்னடியர் என்றும், அனைவரையும் ஒன்றாக இணைத்து, திராவிடர்கள் என்றும் அழைத்துக்கொள்வதிலே தவறவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை! ஆனால் ஒரு காலத்தில் இந்தியர்களாக இருந்து தமிழர்களானவர்கள் இப்போது 'இந்தியத் தமிழர்களாக' இருக்கிறூர்கள். இனவளர்ச்சித் தத்துவம் இப்படி வீட்டுக்கு வீடு மாறுவதில்லை. நாட்டுக்கு நாடுகூட மிகக் குறைவு; ஆனால் கண்ணகி அசசகத்திற்கும் இருசப்பத் தெருவுக்கும்கூட மாற்றிக்கொள்ளலாம் என்பது புதிய தத்துவ ஞானிகளின் முடிவு! இவர்களிலே ஒரு பெரியவர் 'மிஸ்டர் மாநிலம்' என்ற செல்லப்பெயர் கொண்டவர்! அவருக்கு ஒரு மாறுபெயர் "தமிழன்"! இந்தத் தமிழன் கூட அண்ணாவின் பேச்சினைக் குறைத்து மதிப்பிட்டு இரட்டைக் குரல், சுயாட்சி ஒளி, பிரிவினை இருள் என்றெல்லாம் எழுதியிருக்கிறூர்! தமிழன் தன்னுடைய மனத்தைத் தக்க விளக்கம் கேட்டுவிட்டுத்தான் எழுதியிருக்கவேண்டும்! அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்தால் தலைவர்கள் எங்கெங்கே எப்படியெப்படி இடறிவிழுவார் என்பதை இந்தப் புதிய தமிழனும் செய்திருக்கிறூர்! இந்த தமிழன் யார் என்பதும் எனக்குத் தெரியும். அவருக்கும் அண்ணாவுக்கும் இடைவெளி எவ்வளவு என்பதும் தெரியும்! ம. பொ. சி. யார் அண்ணாவை நேரடியாக எழுதுவதற்கு ரெம்பவும் வெட்கப்படுவதில வியப்பில்லை! பத்தாண்டுகளுக்கு முன்னாலே இருந்தது போலவே, இப்போதும் இருக்கிறூர் அந்த மாநிலத்தின் தனித்தலைவர்! அறிஞர் அண்ணா அவர்கள் தாயகத்தின் விடுதலைத் தலைவராக உயர்ந்திருக்கிறூர்! தமிழரசுக் கழகத்திலேயே எல்லோரும் படித்துப் பார்க்காத, படிக்கத் தக்கதென்று மதிக்காத ஒரு புத்தகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் படித்துப் பார்கக வேண்டுமென்று கேட்டிருக்கிறூர்! தலைவர் எழுதிய புத்தகத்தை தலைவரே விற்றுத் தீர்க்கவேண்டிய வலுக்கட்டாயத்திலே இருப்பதைத்தான் அவருடைய விளம்பரம் தெரிவிக்கிறது. அந்தப் புத்தகம் எப்படி இருக்குமென்பதை தமிழனுடைய கட்டுரையை வைத்துக் கணக்கிட்டு விடலாம்! முன்னேற்றக் கழகம் பிரிவினையைக் கைவிடவேண்டும் என்று தெரிவித்துள்ள சுயாட்சித் தலைவரும் உலகத்தின் அரசியல் விழிப்புக்குத் தன்னையே தலைவராக எண்ணிக்கொண்டுள்ளவரையும் கணக்கிட்டுப் பார்ப்போம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரலை எந்த வகையிலும் மாற்றிக் கொள்ளாத நிலையிலும் முறையிலும் அறிஞர் அண்ணா அவர்கள் மதுரைப் பொதுக் கூட்டத்திலே பேசினூர்கள்! பொன்னம்பலத் தியாகராசர் சுதந்திரக் கட்சியில் சேரப் போகும் செய்தியை விளக்கும்போதுதான் "சென்னை மாநிலத்திற்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கு இங்கேயுள்ள எல்லாக் கட்சிகளின் கூட்டுறவுடன் மத்திய சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க பி. டி. ராசன் தலைமை வகிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திராக் கட்சி ஆகியவைகளுடன், மன்னிக்க வேண்டும் ம. பொ. சிவஞானக் கிராமணியாரையும் சேர்த்துக்கொண்டு செயல்பட முன் வரட்டும்" என்பதாகக் குறிப்பிட்டார்! மதுரைத் தமுக்கம் மைதானத்தில் நிரம்பக் கூடியிருந்த மக்கள் அனைவரும் இதனை அறிவர். தமிழரசுத் தொண்டர்களில் ஓரிருவர் கூடக் கேட்டிருக்கலாம்! அவர்களுடைய மாபெரும் தலைவரைக் கொண்டு மிகப் பெரிய மாநாடுகளைக் கூட்டும்போதுகூட அவர்கள் இப்படியொரு சிறப்பான நிகழ்ச்சிகளைக் கண்டதில்லை! ம. பொ. சியாரைக் குறிப்பிடுமுன் அண்ணா மிகக் கவனமாக "மன்னிக்க வேண்டும்" என்று மக்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார்! காரணம் அவரும் அவருடைய கட்சியும் அந்தத் தரத்திலே இருப்பதை அறிஞர் அண்ணா அவர்கள் அறிந்தவரென்ருலும், அந்த நிலையிலேயிருக்கும் அவர்களை இந்த நேரத்தில் எடுத்துக் காட்டுவதை மக்கள் தவருக எண்ணிவிடக் கூடாதே என்பதற்காகவே தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார்! தன்னேரில்லாத தமிழர் தலைவர் இந்த உண்மையினை உணராத வகையில் தமிழரசுகளின் சுயாட்சித் தேவையைத்தான் முன்னேற்றக் கழகத் தலைவரும் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று மதிப்பிட்டுள்ளார்கள்! மதுரையிலேயிருக்கும் கலாசாரக் கழகத்தவர்கள் துண்டு வெளியீடுகூட வெளியிட்டுவிட்டார்கள்! எருமைக்கன்றுக்குட்டிமீது ஏறி, இப்போது சாட்டை பிடித்திருக்கிற ஒரு கவிகூட 'அறிஞர் வருகிறூர் ம. பொ. சி. பாதைக்கு' என்று தெரிவித்திருந்தார்! 'எருமைக் கன்றுக்குட்டி என்று பாட்டு எழுதுகிறவனென்னலாம் அந்தக் கட்சியிலே கவிஞன்' என்று மாரிசாமி சொன்னதையும் அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட நாட்டுப் பிரிவினையை அறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு உறுதியுடன் விளக்கியிருக்கிறூர் என்பதையும் கட்டுரையாளர் புரிந்துகொண்டிருக்கிறூர்! ஆனால் "சுயாட்சியா? பிரிவினையா?" என்ற தன்னுடைய குரலின் எதிரொலிதான் அண்ணாவின் மதுரைப் பேச்சு என்று சொல்லும்போதுதான் அவருடைய தன்மானமும் சுய அறிவும் தலை குப்புறக் கவிழ்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையே மாறிவிட்டது என்பது தமிழரசாரின் இப்போதைய முழக்கம்! தமிழரசுக் கழகம் சுடுகாடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்டுபவாபோல, சுடுகாடு வேண்டாம் சுயாட்சிதான் தேவை என்று அண்ணா சொன்னூராம். சிலப்பதிகாரத்தில் சிலம்பைக் களவாடாத கோவலன் கொல்லப்பட்டான். அதுபோலவே எழுத்துக்களையும் சொற்களையும் களவாடாமல் கட்டுரை எழுதிடவேண்டிய கன்னக்கோல் தமிழன் எங்கோ எவரிடமிருந்தோ சில வார்த்தைகளைத் திருடித் தன்னுடைய திருட்டை மறைக்க அவைகளை அண்ணாவின் பேச்சிலே இணைத்துவைத்து இரட்டைநாக்கு என்கிறூர். மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டால் அன்றே பிரிவினைக் கோரிக்கைக்கு உள்ள ஆதரவு அழிந்துபோகுமாம்! அதிகாரங்களைத் தந்துவிட்டால் சென்னையிலே இருக்கின்ற சர்க்காரின் மானத்தைக் காப்பாற்றியதாக இருக்குமே தவிர, முன்னேற்றக் கழகத்தின் பிரிவினையை அழித்துவிட்டதாக அமைந்துவிடாது! இருசப்பத் தலைவரின் கருத்து உண்மையென்ருல் டில்லி ஆட்சியினர் இதனை எப்போதோ செய்திருப்பார்கள்! 'மாநிலம்கூட' சென்னைக் கோட்டைக்குள்ளே புகுந்திருக்கலாம்! கலாச்சாரக் கழகத்தின் வேலைகள்கூட முடிந்திருக்கும்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் குரல், சிலம்பைத் தந்த காரணம் என்ன என்று ஆராய்ச்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு இருளாகத் தென்படலாம்! ஆனால் துணைக்கண்டத்தின் அரசியல் பாதையில் இந்தக் குரல் மிகவும் வலிவுபெற்றுள்ளது என்பதையும் அவர்கள் பாதையை விட்டு விலகியபின்புதான் உணரமுடியும்! அரசியல் பாதையில்தான் பங்கப்பட்டுச் சருக்கி விழுகிறூர்கள் என்ருல், இந்தத் தமிழ்த் தலைவரின் சிலப்பதிகாரக் காரணக் கட்டுரையும் "படுபிரமாத"மாயிருக்கிறது. அதைக் கண்ட தமிழ்ப் பேராசிரியர்கள் எள்ளி நகைக்கிறூர்கள்; அதனையும் பின்னொரு முறை தெரிவிக்க இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கு, சுயாட்சிக்கும் நாட்டுப் பிரிவினைக்கும் உள்ளே வேறுபாடு தெரியாதது கட்டபொம்மன் சினிமாபபட விளம்பரத் தலைவருக்கு வியப்பாக இருக்கிறதாம்! கொள்கையை விளக்கியவர் திடீரென்று அறிஞர் அண்ணாவின் தகுதியையும் திறமையையும் சந்தேகிக்கும் வகையில் வார்த்தையைப் போட்டுள்ளார்! சிவஞான கிராமனியார் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்கு அண்ணா எவ்வளவு சங்கடப்பட்டார் எனபதை மதுரைப் பொதுக்கூட்டம் அறியும் அது எவ்வளவு உண்மை என்பதை கண்ணகித் தலைவரின் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. உலகத்திலே உள்ள அரசியல் தலைவர்களுக்கெல்லாம் கன்னக்கோல் தீட்டுவது

கூடலரசன்

— 8-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 5-12-'59 | இதழ் 25

வெள்ளக் கொடுமையும் புகைவண்டிகளின் தாமதமும்.

வானம் வாயை மூடிக்கிடந்தாலும் துன்பம்!

அதற்கு மகிழ்ச்சி பொத்துக்கொண்டு வந்து கொட்டினாலும் துன்பம்!

எதையும் அடக்கி ஆளும் வலிமைபெற்று வருகின்ற மனிதன், இதையும் அடக்கிஆளும் நாள் தொலைவிலில்லை. வானம் மூடிக்கொண்டு கிடந்தால், அது மழையை ஒளித்துவைத்திருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, வேண்டியதைக் கொண்டுவரும் ஆற்றல் மனிதனுக்கு வந்துவிட்டது.

இனி, பெய்யும் மழையும் அளவோடு, ஆபத்தில்லாமல் பெய்ய அவன் முயற்சிகளை மேற்கொள்வான்; வெற்றியும் பெறுவான்; நம்பலாம்.

ஆனால் அதுவரைக்கும் தென்னகப் பிரயாணிகள் இந்தத் தொல்லைகளைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதே! ஆண்டுதோறும் நவம்பர்-டிசம்பர் திங்களில், இந்த மழையின் கொடுமை தமிழகத்தாரைப் பல வழிகளில் வதைக்கிறது; அறிவோம்.

இந்த இரண்டு மாதங்களிலும் தென்னகப் பிரயாணிகள் உறுதியுடன்-நம்பிக்கையுடன் புகைவண்டிகளில் ஏறுவதென்பது இயலாததாகிவிட்டது. முன்னர் விபத்துக்கள் ஏற்பட்ட இடங்களிலேயே இன்னும் விபத்துக்கள் ஏற்படும் என்று தோன்றுகின்றன; நடக்கவும் செய்திருக்கின்றன. இவ்விபத்துக்களிலிருந்து தப்பிப்பதற்காக, புகைவண்டிகள் வழிமாறி வருவதாலும், வழி மாறி வரும்போதே வழக்கமான வேகத்தைக் குறைத்துக்கொள்வதாலும், பிரயாணிகளுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. பொதுவாகப் பன்னிரண்டு மணி நேரம் பிரயாணம் செய்வதே கடுமையாக இருக்கிறது. இப்போதோ கடும் மழையோடும் குளிரோடும் மேலும் ஏழு எட்டுமணி நேரம் பயணம் செய்தால் என்னென்ன கொடுமைகள் வருகின்றன என்பதை வரையறுத்துச் சொல்ல முடியவில்லை. வண்டியின் கதவுகளை அடைத்தும், சாரல் உள்ளே விழுவது நிற்கவில்லை. உள்ளே வந்து நிறையும் மழைத்துளிகளால் வண்டியும் வெள்ளக்காடாக ஆகிவிடுகிறது.

இவற்றையெல்லாம் தவிர்க்கச் சில வழிகளை நாமும் தருவோம். அரசினரும் மேலும் பல வழிகள் ஆய்ந்தறியலாம்.

காலம் கடந்த பாலங்களை - விபத்துக்களாவனவற்றைச் செம்மைப்படுத்துவதோடு உங்கள் கடமை முடிந்துவிடுவதாக நினையாதீர். அவற்றை அறவே இடித்துத் தள்ளிவிட்டு, அவ்விடங்களில் புதுப் பாலங்களையும் புதுப் பாதைகளையும் முன்னிலும் வலியனவாய் அமைக்கவேண்டும்.

தண்டவாளங்களை இன்னும் வலியனவாய்-இன்னும் மிகுதியான வேகத்தைத் தாங்குவனவாய் அமைப்பதன்மூலம், தாமதத்தைத் தவிர்க்கலாம்.

பெட்டிகள் அனைத்தும் திண்ணிய பாதுகாப்புடையனவாய் அமைதல் வேண்டும். முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புப் பெட்டிகளின் சன்னல்கள் துளி மழையும் உள்ளே விழாதவாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மூன்றும் வகுப்புப் பெட்டிகளில்மட்டும இந்த அக்கரை செலுத்தப்படாதிருப்பது தவறு.

மழைக் கொடுமையால், வெள்ளத் துன்பத்தால் உண்டாகும் தாமதம் போதாதென்று, வண்டிகளின் "கிராசிங்"கால் வரும் தொல்லைகள் வேறு நம்மை வாட்டுகின்றன. ஒரு வண்டி ஒரு நிலையத்தில் புறப்பட்டுவிட்டால், எதிரில் உள்ள அடுத்த நிலையத்தை நோக்கி வரும் வண்டி நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்தத் தாமதத்தைத் தவிர்க்க வேண்டுமானால், தென்னகமெங்கும் இரட்டைப் பாதைகள் அமைக்கப் பெற வேண்டும். சென்னையில் மின்சார வண்டிக்கும் வடமாநிலங்களில் எல்லா வண்டிகட்கும் இம்முறை பின்பற்றப்படுவதை அறிவோம். அதனால் கால தாமதம் தவிர்க்கப்படுவதையும் பல வசதிகள் பெருகுவதையும் பொதுமக்களைப்போலவே, புகைவண்டித் துறையினரும் வரவேற்பர் என்றே கருதுகிறோம்.

இவை எல்லாம் காலத்தே செய்யப்பட்டால், வசதிகள் பெருகி. துன்பங்கள் குறைந்து, பொதுமக்கள் பயன்பெறுவர். செய்வரா, தில்லி அரசினர்? ★

உருவகம்:

ஈயும் சிலந்தியும்

ஓங்கியுயர்ந்த மரத்தின் கிளைகளிலே சிலந்தி தன் கூட்டைக் கட்டிக்கொண்டிருந்தது. கடற்கரையிலே சிறுவர்கள் கட்டும் மணல் வீடுகளை அலைகள் எழுந்து எழுந்து அழித்துவிடுவதுபோல, அங்கு வீசிய காற்றும் சிலந்தியின கூட்டைக் கலைத்துக்கொண்டே இருந்தது. இருந்தாலும் சிலந்தியோ அலுப்போ சலிப்போ கொள்ளவில்லை. மீண்டும், மீண்டும் தன் கருமமே கண்ணாகக் கூட்டைக் கட்டிக்கொண்டே இருந்தது. பார்ப்பவர்கள் சிலந்திக்கும் காற்றுக்கும் ஏதேனும் பந்தயமுண்டோ என்று எண்ணும்படியாக சிலந்தி கட்டுவதும், காற்று அழிப்பதுமாக ஒரு நாடகமே நடந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஈக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்தச் சிலந்தி ஏன் இப்படிக் கலையும் கூட்டைக் கட்டிக் கட்டிக் காலத்தை வீணாகக் கழிக்கிறது என்று ஐயப்பட்டது. ஒரு வேளை சிலந்திக்கு ஏதாவது பைத்தியம் ஏற்பட்டு விட்டதோ என்றும் எண்ணியது. உண்மையிலேயே பைத்தியம் பிடித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அதன் இச்செயல் பைத்தியக்காரத் தன்மை கொண்டது என்பதில தவறில்லை என்று எண்ணியவாறே எழுந்த இறுமாப்பு அலைமோத ஈ, சிலந்தி இருக்கும் இடத்தை நோக்கிப் பறந்தது.

பறந்து சென்ற ஈ "சிலந்தி...சிலந்தி" என்று அழைத்தது. சிலந்தியோ கேட்டும் கேட்காததுபோலத் தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தது.

மீண்டும் ஈ "சிலந்தி...சிலந்தி" என்றது. பதிலில்லை.

மீண்டும் ஈ ஆத்திரத்தோடு "அட முட்டாளே...நான் உன்னைப் பைத்தியம் என்று நினைத்தது சரியாகப் போயிற்று" என்றது.

இந்தச் சொல்லைக் கேட்டவுடன் சிலந்தியோ மெல்லத் தலையை நிமிர்த்தி ஈயைப் பார்த்துத் தாழ்த்திக்கொண்டு, தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருநதது.

ஈக்கோ மேலும் மேலும் கோபம் ஆவேசமாக எழுந்தது. 'முழு முட்டாளே!, உனக்குச் சொந்த புத்தியுமில்லை; சுயபுத்தியுமில்லை. நான் சொல்வதைக் கேள்; ஏன் இப்படி வீசும் காற்றில் கூடுகட்டிக் காலத்தை வீணாக்குகிறாய்? காற்றோ உன் கூட்டில் பாதியைத்தான் சிதைக்கிறது; நான் இதோ முழுக்கூட்டையும் சிதைத்து அழித்துவிடுகிறேன் பார்! அப்பொழுதுதான் உனக்குப் புத்தி வரும்" என்று கத்தியவாறே சிலந்தியின் கூட்டை நோக்கிப் பறந்து சென்று அதன் வலையிலே விழுந்து கால்களாலும், இறக்கைகளாலும் உழப்பியது. ஆனால் ஈயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எதிர்பாராத விதமாகத் தன பலம் முழுமையும் எங்கே போயிற்று என்றே அதற்குப் புரியவில்லை. கூட்டைச் சிதைக்கப் போய் அக்கூட்டிலிருந்து தான் விடுதலை பெற்றால் போதும் என்று ஆகிவிட்டது. தன்னை விடுவித்துக்கொள்ள என்னென்னவோ முயற்சி செய்தது. முடிந்தால்தானே? இறுதியாக அயர்ந்து போய், சிலந்தியைப் பார்த்தது. அது முன்போலவே இப்பவும் எதுவும் பேசாமல் தன் வழியே கூட்டைக் கட்டிக்கொண்டு இருந்தது.

ஈக்குப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. தன்னை மீறிய நிலையில் "சிலந்தியே நானதான் முட்டாள்; உண்மையில் நீதான் அறிவாளி" என்று கத்தியது.

'நல்ல வேளை இப்பொழுதாவது தெரிந்து கொண்டாயே" என்று கூறியவாறே ஈயை நோக்கி நகர்ந்தது.

அவனவன் வேலையை அவ்வவன் பார்த்தால் யாருக்கும் துன்பமில்லை.

-கரந்தை-கணேசன்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு

வேண்டுகோள்.

"தென்றல்" பொங்கல் மலரில் நம் கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருடைய புகைப்படங்களையும் ஒரு சிறப்புப் பகுதியாக வெளிடக் கருதியுள்ளோம். எனவே பொதுக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் "பாஸ்போர்ட்" அளவில் தமது புகைப்படம் ஒன்றையும், தமது பெயர், ஊர், கிளை, மாவட்டம், பொதுக்குழு உறுப்பினரான ஆண்டு முதலிய குறிப்புக்களையும் இத்திங்கள் 15-ம் நாளுக்குள் கிடைக்கும்படி அனுப்பிவைத்து ஒத்துழைக்கக் கோருகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்.

கம : அது எப்படிண்ணே முடியும் !? நானும் அவரு புருஷன் - மனைவி மாதிரிப் பழகிட்டோம். ஒரு வருஷமா, ரெண்டு வருஷமா... ஏழு வருஷம்'ண்ணேன்; ஏழு வருஷம் !

பிள்ளை : ஏழு வருஷம் ! ஏழு வருஷமா எங்கண்ணுலேயும், அம்மா கண்ணுலேயும் மண்ணைத் தூவிக்கிட்டிருந்திருக்கியே; பாவி ! அந்த அயோக்கியப் பய உனக்கு என்ன மயக்குப்பொடி போட்டானோ தெரியலையே !

கம : அவரை ஏம்'ப்பா திட்றீங்க ? திட்டினா என்னைத் திட்டுங்க; அவரைத் திட்டாதீங்க !

விஜ : அவர் ! எங்கிருந்து வந்துது அந்த அவரு ! அயோக்கியக் கழுதை ! போ, உள்ளே!... இனிமே நீ இந்த வீட்டிலதான் இருக்கணும்; நான் சொல்றவனைத் தான் கட்டிக்கணும் ! உம் : போ !

கம : அண்ணே ! அப்பா ! என்மேல கொஞ்சம் இரக்கப்படுங்க. அவர் இல்லாம என்னால வாழமுடியாது !

விஜ : ஆமா...பெரிய வாழ்க்கையைக் கண்டுட்டா... போ, உள்ளே !...— போறண்ணுப் போவியா... ?

(என்று திரும்பவும் அவளை அடிக்கிறார். அழுது கொண்டே உள்ளே போகிறாள் கமலா.

உள்ளே வந்த அவளை அணைத்துக்கொண்ட கண்மணி, தான்மட்டும் மெதுவாக வெளியே வருகிறாள்.)

கண் : (மெதுவாக) இந்தாங்க...!

விஜ : (கோபமாக) என்ன ?

கண் : கோபப்படாம இருந்தாச் சொல்றேன்.

விஜ : ஒண்ணும் கோபமில்லை. சொல்றதைச் சொல்லித் தொலை !

கண் : கமலா வேறொருத்தனைக் கட்டிக்கிடணும்ணு அவகிட்டயே சொல்றீங்களே, இது நல்லா இருக்கா ? ஏழு வருஷமா ஒருத்தருகிட்ட-அதும் வெறும் கடித விவகாரமா இல்லாம-புருஷன்-மனைவி மாதிரிப் பழகிட்டு...சே ! அது பெரிய அக்கிரமம்'ங்க. அக்கிரமம் மட்டுமில்ல; அநியாயப் பாவம்கூட.

விஜ : அக்கிரமம் ! பாவம் ! இதையெல்லாம் யார் கிட்ட சொல்றே கண்மணி ? எங்க கத்துக்கிட்ட இதையெல்லாம் ?...எனக்கு எல்லாம் தெரியும். நீ சும்மா கெட !

(அதற்கு மேலும் ஏதோ பேச முயல்கிறாள் கண்மணி. விஜயகமூர்த்தி எதிரில் கிடந்த கட்டையைப் பார்க்கிறார். புரிந்து கொண்ட கண்மணி உள்ளே போய்விடுகிறாள்.)

பிள்ளை : அப்புறம் என்ன செய்யலாங்கிற ?

விஜ : என்ன செய்றது ! நீங்க இன்னைக்குப் புறப்பட்டு ஊருக்குப் போங்க. இவளுக்கு வேற கல்யாணம் ஏற்பாடு செய்துட்டு நான் உங்களுக்குத் தந்தி அடிக்கிறேன். அம்மாவையும் கூட்டிக்கிட்டு உடனே புறப்பட்டு வாங்க !

பிள்ளை : சரி ! அப்போ...

விஜ : ராத்திரி வண்டிக்கே புறப்பட்டுடுங்க. (திரும்பி) தம்பி !

வீர : அண்ணே !

சிறு கற்பனை நாடகம் :



— முன் இதழ்த் தொடர்ச்சி —

விஜ : அப்பாவை ஊருக்கு அனுப்பிச்சுட்டு வந்திடு !

வீர : துணைக்கு நானும்...

விஜ : வேண்டாம். நீ போயிட்டா இங்கே யாரு சமையலைக் கவனிக்கிறது ?

வீர : சரி'ண்ணேன் !

காட்சி 3.

(ஒரு மாதம் கழித்து ஒரு நாள். அதே வீடு. அதே இடம். விஜயகமூர்த்தி ஒன்றும் புரியாமல் அங்குமிங்கும் நடக்கிறார். எதிரில் வழக்கமான 'மெஞ்ஞானப்' புத்தகத்தை விட்டுவிட்டு, கைகளைப் பிசைந்தபடி வீரபாண்டியன் நிற்கிறான்.)

விஜ : (உள்ளே திரும்பி) கமலா ! கமலா ! உள்ளிருந்து கமலா வருகிறாள்.

கம : என்னண்ணே !

விஜ : கண்மணியைக் கடைசியா நீ எப்போ பார்த்தே ?

கம : மூந்தாநாள் காலை ஒன்பது மணிக்கு. நீங்க எட்டரை மணிக்கு ஆஸ்பத்திரிக்குப் போனீங்கல்ல... அதுக்கு அரைமணி நேரத்துக்குப் பெறகிலேருந்து ஆளையே காணலை.

விஜ : அந்த இராத்திரியே நீ எங்கிட்ட சொல்றதுக்கென்ன ?

வீர : எங்கிட்ட இவ சொன்னுண்ணே. அண்ணி சில சமயங்கள்'ல அதுமாதிரி எங்காவது போயிட்டு மறுநாள் வர்றதுண்டுல்ல; அதுபோல இப்போ போயிருக்குண்ணு நெனைச்சேன். தன்னுடைய சினேகிதிகள் வீட்டுக்கு இதுக்கு முந்தி இப்படிப் போனதை நீங்ககூட வேண்டாம்ணு சொன்னதில்லையே !

விஜ : சினேகிதிகள் வீடுண்ணுக் கூட அதுக்கு ரெண்டு நாளா ? நேத்துப்பூரு அவளுக்குத் தெரிஞ்ச வீடுகளையெல்லாம் வலை போட்டுத் தேடியாச்சு. ஒருவேளை பெறந்த வீட்டுக்குப் போயிருப்பாளோண்ணு ராத்திரி ஊருக்கு 'டிரங்கால்' போட்டேன். அங்கேயும் வரலைண்ணு மாமா சொல்லிட்டாங்க. அப்பாகிட்டயிருந்தும் அதே தகவல் வந்துட்டுது......பின்னே எங்கதான் போயிருப்பா ? எங்கிட்ட சொல்லாம எங்கயும் அவ போனதில்லையே ! (கமலாவைப் பார்த்து) எல்லாம் இவளாலதான். இந்த எழவெடுத்தவா எப்ப என் வீட்டுப் படியை மதிச்சாளோ அதிலேருந்து எல்லாம் வந்திட்டுது...

வீர : ஏண்ணே ! போலீசில சொல்லி வச்சா ?

விஜ : ஆமா. எம் பொண்டாட்டியைக் காணும்; புடுச்சிக் குடுங்கண்ணு புகார் பண்ணுனா என்ன நெனைப்பாங்க !? தங்கச்சி விவகாரம் போலீசுக்குப் போயி, சிரியாச் சிரிச்சு இப்பதான் ஓஞ்சிருக்கு. நீ புதுக் கேசு போடச் சொல்றே. பொண்டாட்டி'ண்ணு உனக்கென்ன தெரியும்; நீ ஒரு பிரமச்சாரிக் கழுதை ! ஒனக்குண்ணு ஒருத்தி வந்தாத்தான அந்த எழவு புரியப்போவுது உனக்கு !

(அண்ணனுடைய திட்டுகளைப் 'புரியாத' வீரபாண்டியன் திகைப்போடு நிற்கிறான். அந்த நேரத்தில் —

'போஸ்ட் !'

—என்று குரல் கேட்கிறது. எல்லோரும் சுறுசுறுப்படைகிறார்கள். அவர்களை முந்திக்கொண்டு நாய் ஓடுகிறது.

நாயை முந்திக்கொண்டு வீரபாண்டியன், கடிதத்தை வாங்குகிறான்.)

வீர : அட...அண்ணி எழுத்துமாதிரி இருக்கே ! ஆமா...அண்ணிதான் எழுதியிருக்காங்க ! இந்தாங்கண்ணே !

(என்று கடிதத்தைவிஜயகமூர்த்தியிடம் தருகிறான்.

சந்தோஷமும், சந்தேகமும் முகத்தில் பிரதிபலிக்க, விஜயகமூர்த்தி கடிதத்தை வாங்குகிறார். வாங்கிப் படித்தவர், அப்படியே 'தடால்' என மயக்கம் போட்டு விழுந்து விடுகிறார்.

ஒன்றும் புரியாத வீரபாண்டியனும், கமலாவும்.)—

அண்ணே ! அண்ணே !
என்னண்ணே ? அண்ணியை
எங்கண்ணே ?

—என்று அவரைப் புரட்டுகிறார்கள்.

கமலா தண்ணீர் எடுத்து வந்து, முகத்தில் தெளிக்கிறாள்.

மெதுவாக அசைகிறார் விஜயகமூர்த்தி.

கம : இந்தக் கடிதத்தைப் படிச்சிட்டுத்தான் இப்படி மயக்கம் போட்டு விழுந்திட்டாரு. அதில அப்படி என்னதான் எழுதியிருக்கு? படிச்சுச் சொல்லேன் !

(வீரபாண்டியன் திடீர் யோசனை வந்தவனாக, கடிதத்தை எடுத்துப் படிக்கிறான்.)

வீர : (படித்தல்) 'திரு. விஜயகமூர்த்தி அவர்களுக்கு, கண்மணி எழுதிக்கொண்டது...' (திரும்பி) இது என்ன, அண்ணி இப்படி எழுதியிருக்காங்க ! ஒரு பெண்டாட்டி புருஷனுக்கு எழுதற கடிதமாத் தெரியலையே இது...

கம : சரி, சரி...மேலே படி !

வீர : (படித்தல்) 'நான் எழுதப் போகும் செய்தி உங்களுக்கு ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையோ தராது என்றே நம்புகிறேன். நாம் இருவரும் மிகவும் விரும்பி-ஏன், காதலித்து-இரண்டு ஆண்டுகளுக்குமுன் திருமணம் செய்துகொண்டோம். இப்போது திடீரென்று எனக்கு ஒருவர்மேல் காதல் ஏற்பட்டுவிட்டது. இது வெறும் காதலாக நிற்கக்கூடாது, கல்யாணத்துக்கு ஓட வேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்துகிறார். வேறு வழியில்லை. எனவே, அவரோடு போகிறேன். இதைக் கண்டு நீங்கள் அவ்வளவாக ஆத்திரப்படுவீர்கள் என்று நான் எண்ணவில்லை. ஏனென்றால், உங்கள் தங்கை கமலா வேறொருவரோடு ஏழு வருஷங்கள் புருஷன்-மனைவியாகப் பழகியும், அவள் எவ்வளவோ தடுத்தும் நீங்கள் அவளுக்கு வேறுமாப்பிள்ளைதேடிக் கொண்டிருக்கிறீர்கள். வெறும்தாலியில் தானா பெண்மை இருக்கிறது? எனவே, அவளை வேறொருவருக்கு மணம் செய்விக்க முயலும் உங்களுக்கு, உங்களைவிட்டு நான் வேறொருவரைத் திருமணம் செய்வது உடன்பாடாகவே இருக்கும். ஆதலால் அமைதியாக, சமாதானமாக இருப்பீர்கள் என்றே நம்புகிறேன். உங்கள் வாழ்த்துக்களை மானசீகமாக அனுப்பி வையுங்கள் -கண்மணி !'

(அவன் படித்துக்கொண்டிருக்கும்போதே விஜயகமூர்த்தி திடீரென்று எழுகிறார்.)

விஜ : போதும்டா... வெளியில் தெரிந்தால் அவமானம் !... உரக்கப் படிக்காதே !

— ம. புகழேந்தி —

வீர : இதில் அவமானம் என்னண்ணே இருக்கு ? நம்ம தங்கச்சிக்கு மாப்பிள்ளை பார்க்கிறது போல உங்களுக்கும் ஒரு பொண்ணு பார்த்தாப் போச்சு !

விஜ : முட்டாள் ! முட்டாள் ! உனக்கு ஒண்ணும் தெரியாதுடா இடியட் ! போ ! போய் ஒரு தந்தி பாரம் எடுத்துட்டுவா.

வீர : ஏண்ணேண் ?

விஜ : எல்லாம் காரணமாத்தான். கண்மணியோட கடிதத்திலதான் எனக்குப் புத்தி வந்துது. 'உடனே புறப்புட்டு வாங்க. கமலா கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தாச்சு'ண்ணு அப்பாவுக்குத் தந்தி குடு.

வீர : மாப்பிள்ளை ?

விஜ : வேற யாரு ? நம்ம பூபதி தான். ஓடு ! உடனே போஸ்ட் ஆபீசுக்குப் போ. ஓடு !

(கமலா சந்தோஷமும் திகைப்புமாக நிற்கிறாள்:

வீரபாண்டியன்வெளியே ஓடுகிறான். வழக்கம் போல் அவனோடு நாயும் ஓடுகிறது.

அந்த இரண்டும் வெளியே போனதும், சொல்லி வைத்தாற்போல் உள்ளே வருகிறாள் கண்மணி. அவளைக் கண்டதும் திடுக்கிடுகிறார் விஜயகமூர்த்தி.)

— 8-ம் பக்கம் —

"தினகரன்" வாசகர்கள் கேள்விகளும் கண்ணதாசன் அளித்த பதில்களும்

எஸ். எம். பைஸ்தீன், சிலாபம்,

இவ்விருபதாம் நூற்றுண்டில் முக்கியமாகப் பாரதிக்குப்பின் தமிழ்க் கவிதா உலகம் நன்கு முன்னேறியிருப்பதாகக் கருதுகின்றீர்களா? இல்லையா? விளக்கமுடியுமா?

நூறு மடங்கு முன்னேறியிருக்கிறது. பிழையில்லாமல் வெண்பா எழுதுவோர் மூவாயிரம் பேருக்கு மேல் இருக்கிருர்கள். பாரதிதாசன், முடியரசன், வாணிதாசன் போன்ற சிறந்த கவிஞர்களைக் காண்கிருேம். நூற்றுக்கணக்கான காவியங்களும் ஆயிரக்கணக்கான கவிதைகளும் வெளியாகி இருக்கின்றன. பலர் பாரதியையும் மிஞ்சிவிட்டனர். பாரதி காட்டைக்கண்டு சொன்ஞன். மற்றவர்கள் அதைக் கழனியாக்கியிருக்கின்றனர்.

★

சி. எம். பவானந்தர், எட்டியாந்தோட்டை.

சினிமா நட்சத்திரங்களில் உங்களுக்குப் பிடித்தமானவர்கள் யார்?

என்னை வெறுக்காதவர்கள் அனைவரையும் எனக்குப்பிடிக்கும்.

★

க. பிள்ளையார் கொழும்பு-11.

தமிழ்நாடு பிரிவினை கேட்கும் "நாம் தமிழர் இயக்க"த்தினர் ஈழநாட்டின் ஒரு பகுதியையும் சேர்த்துள்ளார்களே! இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

தவருன தத்துவம். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தனி நாடாக இருப்பது முழுஇலங்கை. தமிழனுக்கு அதில உரிமை உண்டே தவிர, தமிழ் நாட்டுக்கு அதில் உரிமை இல்லை.

★

கே. எம். சண்முகம். அம்பாறை.

கலையுலகில் நமது கவிஞர்களும் கலைஞர்களும் ஆற்றிவரும் கலைத்தொண்டை ஒரு சிலர் கட்சிக் கண்கொண்டு சீறுகின்றனரே. இவர்களைப் பற்றித் தங்களின் கருத்து யாது?

"கூர்த்து நாய் கௌவிக்கொளக்
கண்டும்தம் வாயால்
பேர்த்து நாய் கௌவினர்
ஈங்கில்லை"

என்பது நாலடியார் வாக்கு.

★

எஸ். வி. ஆர். தேவநாயகம், கொழும்பு-13.

நீங்கள் கலைக்கு எவ்விதத்தில் தொண்டாற்ற விரும்புகிறீர்கள்?

சினிமாக் கலையைப் பொறுத்த வரையிலும் நான் ஒன்றும் தொண்டாற்ற விரும்பவில்லை. எனக்குப் பணம் தேவை. அதோடு முடிந்த வரை இயக்கக் கருத்துக்களையும் பிரசாரம் செய்ய விரும்புகிறேன்.

★

எம். ஐ. ஏ. ஜப்பார், சாய்ந்தமருது.

நீங்கள் கர்ஞடக சங்கீதத்தை விரும்புகிறீர்களா?

விரும்புகிறேன். ஆனால் விவகாரங்கள் என்றபெயரில் கர்நாடக இசையைச் சகிக்கமுடியாததாக ஆக்குவதை வெறுக்கிறேன்.

★

எஸ். கணேசன், பதுளை.

எம்மாதிரியான பாடல்களை இயற்ற விரும்புகிறீர்கள்?

தொட்டில் - கட்டில் - சுடுகாடு. அதாவது தாலாட்டு, காதல், அழுகை

★

டி. எம். ஹர்சாமரிக்கார், தர்காநகர்.

காதல் என்பது கவிஞனின் வெறும் கற்பனைச் சரக்கேயன்றி வேறில்லை என்பது உண்மைதானு?

மனிதன் என்பவனே வெறும் கற்பனை என்று கூறியவர்களும் இந்த நாட்டில் இருக்கிருர்கள். அவர்கள காதலை ஏன் கற்பனை என்று கூறமாட்டார்கள். காதல் முறிந்ததால் செத்தவர்கள் கணக்கில் அடங்காதவர்கள். முழுக்க முழுக்க உடல், உள்ளம் இரண்டையும் ஆட்கொள்ளும் ஒரு சக்தி, எப்படிக் கற்பனையாக இருக்க முடியும்?

★

கே. சங்கரன், கொழும்பு.

தங்களுக்குப் பிடித்தமான பின்னணிப் பாடகர், பாடகியர், யார் யார்?

எஸ். சி. கிருஷ்ணன், சுசீலா, ராஜா, ஜிக்கி, கோமளா, ஜமுஞராணி, டி. எஸ். பசவதி இவர்கள் அனைவரிலும் இணையற்ற சக்தியைக் கொண்ட உருக்கமான குரல் என்று நான் கருதுவது டி. எஸ். பகவதியின் குரலைத்தான.

★

எஸ். ஏ. ஹமீட், மாத்தளை.

"நாடோடி மன்னன்" படத்தில் தங்களுடைய வசனம் எந்தக் காட்சியிலிருந்து ஆரம்பமாகிறது?

படத்தைப் பார்க்கும்போது வசனத்தைக் கூர்ந்து கேளுங்கள. நான் எழுதியது தனியாகத் தெரியும்.

★

முஸம்மில், தெல்தோட்டை.

தங்களுக்கு எத்தனை வயது?

முப்பத்திமூன்று நடக்கிறது.

★

ஆர். ஜீவரட்னம், வத்துகாமம்.

"காதல்" என்ற இந்தச் சொல்லின் உண்மைத் தன்மைஎன்ன?

உயிரை ஈர்க்கும் சக்தி அது. எவரையும் விடாதது. காட்டிற்கு ஓடிய துறவிகளின் கழுத்திலேயும் அமர்ந்து கொண்டது. ஆண் தன்மை உடைய ஆண்கள், பெண் தன்மையுடைய பெண்கள் யாவரையும் ஆட்கொள்வது.

★

ஏ. எல். எம். தாஹிர், தர்காநகர்.

"தினகரன்" பத்திரிகையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? "கலைக்கதம்பம்" எப்படி இருக்கிறது?

கடல் கடந்த தமிழனின் செழிப்பான தமிழைத் 'தினகரன்' தருகிறது. 'கலைக்கதம்பம்' இன்னும் அழகாக அமையவேண்டும் என்பது என் ஆவல்.

★

ஆர். ஜீவரட்னம், வத்துகாமம்.

உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நாவலாசிரியர் யார்?

வங்காளப் பேராசிரியர் சரத் சந்திர சட்டோபாத்தியாயா.

★

எம். நாகலிங்கம், கண்டி.

தாங்கள் எழுதும் பாடலுக்கு, இசை அமைக்கப்படுகிறதா? அல்லது இசை அமைப்புக்கு எற்றபடி தாங்கள் பாடல் எழுதுகிறீர்களா?

அப்படியும் உண்டு. இப்படியும் உண்டு.

★

எம். எஸ். எம். நஹீப்டீன், தெஹிவளை.

"கலை, கலை" என்கிருர்களே - அர்த்தம் என்ன? கலை எத்தனை வகைப்படும்?

நீங்கள் இக்கேள்விக்குச் சுருக்கமான பதிலையா எதிர்பார்க்கிறீர்கள்? சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதல்ல கலை. ஓய்விருக்கும்போது ஒரு கட்டுரையே எழுதுகிறேன்.

★

தர்மராஜ், அரஞயக்க.

கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் என்ன வித்தியாசம?

கவிஞர்கள் தங்களுக்குத் தோன்றியதை எழுதுகிருர்கள். அறிஞர்கள் உலகத்திற்குத் தேவையானதை எழுதுகிருர்கள்.

★

ஏ. எஸ். எம். அன்சார், அம்பாந்தோட்டை.

"மகாதேவி" படத்திற்குக் கதை வசனம் எழுதத் தங்களுக்கு எத்தனை நாட்கள் சென்றன?

சுமார் ஏழு எட்டு நாட்கள்.

★

பி. எஸ். செல்வசாமி, பலாபத்வளை.

தாங்கள் தமிழ் எதுவரை படித்திருக்கிறீர்கள்? வேறு என்ன பாஷைகள் தெரியும்?

நான் கண்டது கற்றுப் பண்டிதன் ஆனவன். எட்டாம் வகுப்போடு படிப்பு முற்றிற்று. ஆங்கிலம் புரியும்.

'மென்மொழி' மாத்தறை.

ஒரு படத்திற்குப் பாடல்கள் இயற்றும்போது தங்கள் சொந்தக் கருத்தினையா பெரும்பாலும் புகுத்துகின்றீர்கள்?

பாட்டுப்போடும் இடத்தைப் பொறுத்தது அது. எனினும் என் கருத்திலேயே பாட்டுப் போடும் படி தயாரிப்பாளர்கள் விட்டுவிடுவார்கள். கதைக்கு மாறுபடாமல் பாட்டுப்போடுவதே என் வழக்கம்.

★

அப்துல் சமத். கொழும்பு.

நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

திராவிட மக்களின் தனிப்பெருங் கட்சியாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம்.

★

பொ. சண்முகநாதன், மானிப்பாய்.

ஆசிரியரின்றிக் கவிபாடத் துணை செய்யும் சிறந்த நூல் ஒன்று கூறமுடியுமா?

யாப்பு முறைபற்றி, புலவர் குழந்தை ஒரு நூல் எழுதியிருக்கிருர்.

★

முகிலன், வேலணை.

அறிஞர் அண்ணவைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

எல்லோருக்கும் நான்தலைவனுக இருக்க ஆசைப்படுகிறேன். ஆனல் ஆயுள்காலம் முழுவதும் அறிஞர் அண்ண அவர்களுக்குத் தொண்டனுகவே இருக்க ஆசைப்படுகிறேன். அவரைப் பற்றி என் கருத்து என்ன என்பதற்கு இது போதாதா?

★

எம். எஸ். கேசவன், உடப்பு.

நீங்கள் கதை வசனம் எழுதிய படங்களில் உங்களுக்குப் பிடித்தமான கதை எது?

சிவகெங்கைச் சீமை.

★

"கலை அன்பு", கண்டி.

கொள்கை-குறிக்கோள் இரண்டிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

மொத்தத்திட்டம் கொள்கை என்றும், அதன் முக்கியப் பகுதி குறிக்கோள் என்றும் நான் கருதுகிறேன். ஆனல் ஏறக்குறைய இரண்டுக்கும் ஒரே பொருள்தான்.

★

பி. தங்கவேலு, பட்டியாகமம்.

உங்கள் இலட்சியம் என்ன?

கழகத்தின் இலட்சியமே என் இலட்சியம்.

★

எம். ஐ. எம். லாபீர், கொழும்பு-12.

நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிப்பீர்கள்?

படிப்பேன்; சிந்திப்பேன்.

★

சா. காந்திராஜா, பதுளை.

நீங்கள் தயாரித்த "சிவகெங்கைச் சீமை"க்கும் பத்மினி பிக்சர்சாரின் "கட்டபொம்ம"னுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

கட்டபொம்மனின் தொடர்ச்சிக் கதைதான் சிவகெங்கைச்சீமை.

— 10-ம் பக்கம் —

இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ்த் தினசரியான "தினகரன்" எனும் ஏட்டின் வாசகர்கள் அவ்வேட்டின் மூலம் விடுத்த வினுக்களுக்கு நமது ஆசிரியர் கண்ணதாசன் அவ்வேட்டின் 15, 20-11-'59 நாளிட்ட இதழ்களில் அளித்திருந்த பதில்கள் இவை.

கசந்த பால்

அவனுக்கு கவலையும் இல்லை; களிப்பும் இல்லை-பசியும் இல்லை; தாகமும் இல்லை-வாழ்வும் இல்லை; தாழ்வும் இல்லை. எல்லாவற்றையும் கடந்தவன் அவன். உலகம் அவனை பைத்தியம் என்கிறது. ஊர் ஏமாளி என்கிறது; உறவு அறிவிலி என்கிறது. அவன் "சுயபுராணம்" எதுவுமே படிப்பதில்லை. பற்றற்று, உறவற்று, பந்தபாசமற்று, முற்றுந் துறந்தவனாய் வலம்வரும், அவன் வாயிலிருந்து வரும் ஒரே வார்த்தை 'கண்ணம்மா!' என்பதே.

மும்மலம் கடந்த ஞானிகளையும் பெண்ணாசை விடுவதில்லையே! இவனை மட்டுமென்ன?— இந்த ஆசையினால் அவன் அந்த ஊரில் நடமாடும் கண்காட்சியானான் என்பர். ஆகா! அவன் வாயிலிருந்து வந்த சொற்கள் ஒவ்வொன்றும்...புத்தனின் போதனைகளை பௌத்தர்களே கேட்கவில்லையாம்.தமிழனா கேட்கப் போகிறான்? அவனை கலிலியோ என்று கருதியதோ, என்னவோ, கல்லை எறிந்தது, நன்றிகெட்ட மனிதர் கூட்டம். ஆயிரம் உண்மைகளைப் போதித்த அவனுக்கு அருமையான பரிசுதான் அது! இல்லாவிட்டால் குமரியின் இதழ்ச் சிவப்பை அவன் நெற்றியில் காண முடியுமா?

நிலமகளுக்குச் சிவப்புப் பொட்டு வைத்த அவனை அவள் தழுவிக் கொண்டாள். பரிசு தந்தவர்கள் எவரும் பக்கம் நின்று அந்த ஆனந்தக் காட்சியைக் காணவில்லை. ஏதோ வேலையாக அந்த வழியே வந்தேன். இவனைக் கண்டேன். நானும் ஏசுவின் வாரிசல்லவா? என்னால் முடிந்ததைச் செய்தேன். மருத்துவமனையில் பஞ்சு மெத்தையிலே கிடந்த அவன் இடையிடையே முனகினான். அவன் ஊமை இதயம் ஓராயிரம் உண்மைகளைச்சொல்லத் துடித்தது. இதழ்கள் மட்டும் விரிந்தன. ஒலியேதும் கிளம்பவில்லை. சற்றுப் பொறுத்தேன். ஏதோ சில உண்மைகள் அவன் வாயிலிருந்து, இதயத்திலிருந்து வெடித்துவந்தன. ஆனால் ஒவ்வொன்றுக்குமிடையே நீண்ட இடைவெளிகள்...

எனக்கு இருந்தாலும் ஓவியத்தில் அத்தனை ஆசை கூடாது. பித்தனைப் போல அலைந்தேன் அந்த ஆசையால். தூரிகையின் தரம் பற்றியோ, வர்ணங்களின் வகை பற்றியோ எனக்குத் துளியும் தெரியாது. ஆனால் ஊரார் எதை எதைப் பாராட்டுகின்றனரோ அவற்றிலெல்லாம் முன்னே நிற்பதில் மிகுந்த ஆசை எனக்கு. இதைப் புகழ்க்கிறுக்கு என்றுகூட சொல்லலாம். நெல்லை சித்திரகூடத்தில் ஓர் ஓவியக் கண்காட்சி ஏற்பாடாகி இருந்தது. வழியில் கண்ட பல வேசம், "என்ன அண்ணாச்சி ஓவியக்காட்சி வைக்கிறீங்களாமே! உங்க படங்களை வைக்கிறீயளா?" என்று கேட்டுவிட்டுத் தன் வழியில் போனான. நான் பதிவாய்ச் சாப்பிடும் ஐங்ஷன் மாருதி விலாசில் ஒரு காபியைக் குடித்துவிட்டு வீரராகவபுரம் சத்திரத்திற்கு வந்தேன். நண்பர்களோடு தனித்துப் பேசுவதற்கென்றே அங்கு ஒரு தனி அறை எடுத்துப்போட்டிருந்தேன். சிந்து பூந்துறை சண்முகமும், டவுன் சுப்பிரமணியமும், பேட்டை இப்ராகிமும், சிலோன் சுப்பையாவும் எற்கனவே வந்திருந்தனர். என்னென்னவோ பேசினர். அவர்களும் ஓவியக் காட்சியைப் பற்றிப் பேசித் தூண்டினர். எதையும் என் மனம் நிலையாகச் சிந்திக்கவில்லை. அறையைவிட்டு வெளியே நடந்தேன்.

சுலோசனா முதலியார் பாலம் மறைந்தது முருகன் குறிச்சி கரைந்தது. நாகர்கோவில் சாலை நீண்டுகொண்டே இருந்தது; என் நடையும் நீண்டது. ஊசி கோபுரம் மறைந்தது. மனகாவலம் பிள்ளை மருத்துவமனை வந்தது. குறுக்கு வழியில் இறங்கினேன். பெருமாள் புரத்தில் உள்ள என் வீட்டிற்கு எப்போது சென்றேனோ! கால்களை விட மூளை களைத்திருந்தது! ஓவியக் காட்சியில் எப்படி பங்குகொள்வது?...நான் ஓவியத்தில் மன்னன் என்று வீணாப் பிதற்றியது எவ்வளவு தெல்லையாகப் போய் விட்டது...

கண்ணீர் அருவி நின்றது மறுபடியும் எப்போது கொட்டுமோ?...

அவள் ஏழைதான்... ஆனாலும் என் வீடு தேடி அந்திப்பொழுதில் வந்திருக்கக்கூடாது. ஊரெல்லாம் என் ஓவியத்தை 'ஓகோ' என்று வர்ணித்துக் கொண்டிருக்கையில், தூய கலைஞன் என்று சொல்லி பாராட்டிக் கொண்டிருக்கையில் அவள் என் இல்லம் வரலாமா? வந்ததுதான் வந்தாள்; அந்திப் பொழுதிலா வருவது?

அதுவுமல்லாமல் "ஐயாவை எதற்குப் பார்க்கவேண்டு"மென்றும் கேட்ட என் வேலைக்காரனிடம் "தனிப்பட்ட சேதி பேசவேண்டும், என் பெயரைச் சொல் அவரிடம். அதுபோதும். அவருக்கு எல்லாம் தெரிந்துவிடும்" என்று சொல்வது? அவன் அவளை என் அறைக்குக் கொண்டுவந்து விட்டு விட்டு, நேராக என் தந்தையின் அறைக்குச் சென்று, எவளோ ஒருத்தி என்னைப் பார்க்கவந்திருப்பதாகக் கூறிவிட்டான். அவள் என் அறைக்கு வந்தாள். என்னென்னவோ பேசினாள். எனக்கு கோபம் வரவே நான் கத்திவிட்டேன். "உன்னை முன்னும் பின்னும் தெரியாது போ, போ!" என்று இரைந்தேன்.

"தெரியாதா? என்னிடமிருந்து என் உயிரைக் களவாடியபோது என்னை யாரென்று தெரியவில்லையா?" என்றாள்.

"நான் பிள்ளைத்தாய்ச்சியாய் இருக்கிறேன். என்னை மோசடி செய்யாதீர்கள்" என்றும் அழுதாள்.

"அதனால்தான் உன்னைப் போ என்கிறேன்" என்று கூறிச் சில நோட்டுகளை அவள் முன் வீசினேன். அவள் அதைப்பூமே எடுக்காது, இதயமே வெடித்தவள்போல் வெளியேறினாள். என் தந்தை இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாரென்பது எனக்குத் தெரியாது........

பருவச் சாரல்போல் அவள் இதயம் ஓய்ந்து ஓய்ந்து வெடித்தது. அவளை அப்படி அபலையாக்கி இருக்கக்கூடாது. நான் என்ன செய்வேன். சரி அவள் மனத்திருப்திக்காக இந்த ஒரு வேண்டுகோளையாவது நிறைவேற்றுவோமென்றுதான் அவளிடம் போனேன். சாராடக்கர்புரம் தாண்டி தன்னந் தனியாக இருந்த ஒரு குடிசையில் அவள் வாழ்ந்தாள். அந்தக் குடிசைக்குத் தான் ஒரு சைக்கிளில் சென்றேன். ஒளி சிந்தும் மதி என்னைப் பழிப்பது போல் காணப்படவில்லையா? அவளை ஏறிட்டுப் பார்க்கவே நான் கூசினேன். முன்பு ஒருமுறை இதே இடத்திற்குவந்துபோயிருக்கிறேன். அப்போதுகூட இவ்வளவு வெட்கப்படவில்லை. அவள் தன் குடிசையின் முன் பாயை விரித்தாள். நான் உட்கார்ந்தேன். உள்ளே போய் பாலும், பழமும் எடுத்துவந்து என் அருகில் உட்கார்ந்தாள். எனக்குப் பிடித்த கருப்புத் திராட்சை! பாலைப் பருகபோகும் சமயம் திடீரென்று பலபேரின் நிழல் விழுவதை உணர்ந்தேன் எங்கிருந்து வந்தார்களோ? திடீரென்று அவள்மீது பாய்ந்து அவளைத் தாக்க முயன்றார்கள். நான் அவளை புரட்டிவிட்டு பின்வாங்கினேன். அதற்குள் அவளை ஒருவன் "யாருடி நீ? ஊர்ப் பையன்களையெல்லாம் கெடுப்பதோடு நில்லாமல், பாளையங்கோட்டை நாடார் மகனையும் அல்லவா கெடுத்திருக்கிறாய். அதோடு நிக்காம அந்தப் பையன் வீட்டுக்கும் போய், இவளைக் கல்யாணம் பண்ணிக்கிடும்படி அதிகாரம் வேறல்லா செய்திருக்கா? இவளை விட்டு வைக்கிறதாவது?" எனச் சீறினான்.

ஏற்கனவே என்னால் இவளது உயிரினும் மேலான பொருள் பறி போயிருக்கிறது. இப்போது இவள் உயிர் வேறு பறிபோக வேண்டும். கூடாது-கூடாது. இந்த முடிவுடன் அவர்களிடம் உண்மையைச் சொல்லப்போனேன். அதற்குள் அவர்களில் ஒருவன், அவளுக்கு ஏற்றுக்கொண்டு நான் வருவதாக நினைத்து என்னைச் சாடிவிட்டான். மற்றவர்கள் அவளைச் சாடிவிட்டனர். நானும் அவளும் புது வண்ணம் பெற்றோம், பொங்கிய குருதியால்......

இதுதான் கடைசி வெடிப்பா...?

"நான் ஏற்கனவே திருமணமானவள். என் கணவர் படை முகாமிலிருக்கிறார். எனக்குள்ள இறுக்கலும், தனிமையின் துன்பத்தாலும் பல உயிரோவியங்களை வரைந்தேன். அவற்றையெல்லாம் ஏதாவது ஒரு கண்காட்சியில் வைக்க வேண்டும். ஊரார் அதைக் கண்டு பாராட்ட வேண்டும் என்று எண்ணிய எண்ணத்தில் ஒருநாள் காலை இடி விழுந்தது. இரவு தூங்கப் போகும்போது நான் பார்த்து மகிழ்ந்து வைத்துவிட்டுப் போன சித்திரங்களைக் காலையில் பார்த்தால் காணவில்லை. வெடித்த இதயம், திருடனைத் தேடியது. திருடனைக் கண்டுபிடித்தும் விட்டேன்; கண்டிக்கவும் செய்தேன் தவறுக்கு மன்னிப்புக் கேளாது அதிகாரமாகப் பேசிய அவனைப் பழிவாங்குவதற்காக நான் வைக்கும் பாராட்டு விருந்திற்காவது அவன் வரவேண்டுமென்று அழைத்தேன். வரவும் செய்தான். பழத்தைத் தின்ற பின் நஞ்சு கலந்த பாலைக் குடிக்கப் போகும்போது யாரோ திடீரென்று தாக்கவே என் திட்டமெல்லாம் பாழாயிற்று" என்று அவள் தன்னை விசாரிக்க வந்த போலீசிடம் சொன்னாளாம். ஆனால் என் தந்தை......

"நீயும் அவளும், கள்ளத்தனமாக உறவு வைத்திருந்ததாகவும், அதனால் அவள் கருவுற்று நான்கு மாதம் ஆகிவிட்டதாகவும் அந்தக் கருவைக் காட்டி உன்னை மிரட்டுவதாகவும் அல்லவா நினைத்து, அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, அடையாளம் தெரியாத ஆட்களை விட்டு அவளைக் கொலை செய்யச் சொன்னேன்" என்று என் தந்தை என்னிடமே இப்போதுதானே அலறுகிறார்......

ஓவியத்தின் மீதுள்ள கிறுக்கால், வீணாகப் பேசிய தற்பெருமையைக் காத்துக்கொள்ள முனைந்ததால், நான்தான் அவள் சித்திரங்களைத் திருடிக் கண்காட்சியில் என் பெயரில் வைத்துப் புகழ் வாங்கிக் கொண்டேன், என்பதைத்தான் யாரிடம் சொன்னேன்?"

வெடித்த இதயம் வெடித்தே கிடந்தது. திறந்த வாய் திறந்தே கிடந்தது. அது அசையவுமில்லை; மூடவுமில்லை !.....

என் உடலும் அழவுமில்லை; ஆடவுமில்லை.

பால் கசந்துவிட்டது. இனிப் பயன் என்ன?

— நம்பியார்.

> **அடுத்த இதழில்...**
> **கண்ணதாசன்-**
> **துணிச்சல்.**

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராகுங்கள், வடமொழி வெறியர்களை முறியடிக்க!

சங்க முகவரி :

தமிழ் எழுத்தாளர் சங்கம்.
இளம்பிறைச் சங்கக் கட்டடம்,
திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

கண்ணும் கண்ணும் பார்க்கின்றன.

மனமும் மனமும் நினைக்கின்றன.

உடலும் உடலும் துடிக்கின்றன.

இது காதல்.

இலக்கியத்திலே இதற்குத்தான் தலையாய இடம்.

இளமையிலே இதுதான் ஒவ்வொரு உயிருக்கும் முதற் கொள்கை

சரித்திரத்தில் கணிசமான அளவு போர்க்களங்களை இதுதான் ஏற்படுத்திற்று.

நீதிமன்றத்தில் பாதி மன்றம் இதனால் விளைந்த தகராறுகளைக் கவனிக்கிறது.

தற்கொலைகளிலே முக்கால் வாசிக்கு இது தலைமை வகிக்கிறது.

படுகொலைகளிலே பாதியை இதுதான் விவசாயம் செய்கிறது.

அரசியல் தலைவர்கள் பெறமுடியாத இடத்தை பத்திரிக்கைகளின்மூலம் இது பெறுகிறது.

பசியை விடவா இது பெரிது.

ஆடையை விடவா இது முக்கியமானது.

பல்லூழி காலமாக உலகம் அப்படித்தான் கருதி வருகிறது.

அந்நியர் வேதப்படி ஆதாமும் ஏவாளும் ஆரம்பித்து வைத்த கதை, தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது.

இயற்கை உலகத்தின் வளர்ச்சியையும் இதற்குள் அடைத்து வைத்திருக்கிறது.

இது தூய்மையானது;

இது உயர்வானது;

இது எதிர்ப்புகளைக் கண்டு கலங்காது.

—இப்படி எல்லாம் பெயர் பெற்றிருக்கிறது.

இயற்கையை முறியடிக்க எல்லா வழிகளையும் கண்ட விஞ்ஞானிகள் இதையும் முறியடிக்க முயன்றார்கள்.

அவர்கள் வெற்றி பெற்றிருக்கக்கூடும், அவர்களுக்குக் காதல் இல்லாமலிருந்திருந்தால்!

அணுவைத் துளைத்த விஞ்ஞானிக்கும் மனைவி இருக்கிறாள்.

அகிலத்தை வளைக்க விரும்பிய சர்வாதிகாரியும் அந்தரங்கத்தில் ஒரு காதலியைப் பெற்றிருந்தான்.

நெப்போலியனின் வீர விளையாட்டுக்களைவிட, காதல் சுவையானது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே பதினாறு வயதில் ஒரு ஏழையைக் காதலித்து மாண்டு போன இளவரசியின் எலும்புக்கூட்டை எகிப்து இன்று கண்டெடுத்திருக்கிறது.

வடநாடு காண வருவோர் தவறாது காணும் தாஜ்மகால், இதில் முளைத்தது.

கணவனைக் கொன்று அவன் மனைவியைத் திருடிய ஒரு மன்னன் அதற்கும் காதலென்றுதான் பேர் சொன்னான்.

காதல் நாடகம் எழுதாத நாடக ஆசிரியர்கள் அநுதாபத்திற்குரியவர்கள்.

காதல் கதை எழுதாத கதாசிரியர்கள் கால வெள்ளத்தில் அழிந்து போகிறவர்கள்.

காதல் கவிதை பாடாத கவிஞர்கள் கற்பனையே இல்லாதவர்கள்.

பிற பெண்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்றே ஆடவன் தன்னை அழகு செய்து கொள்கிறான்.

தனக்குரியவளைப் பிறர் பார்க்கக்கூடாதென்றே வீட்டுக்குச் சுவரெழுப்புகிறான்.

காதல் ஒரு முறைதான் வருமென்று இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆனால் வாழ்க்கையில் பலமுறை வருகிறதே!

நான் நினைக்கிறேன்: ஒவ்வொரு பெண்ணிடமும் ஒரு முறைதான் வருமென்று சொல்லியிருப்பார்கள போலிருக்கிறது.

கொஞ்சம் கவனியுங்கள்.

இலக்கியத்தோடு இதில் நான் முரண்படுகிறேன்!

இளமையில்தான் காதல் வருமென்கிறது இலக்கியம்.

இளமையில் வருவது காதலல்ல என்பது என் கருத்து.

உருவத்தைப் பார்த்து உடல் துடிக்கிறதென்றால், அது வெறி.

குருதிக் கொதிப்பு மிதமிஞ்சிப் போகிறதென்றால், அது பித்தம்.

பள்ளியறையிலேயே இருக்கத் தோன்றுகிறதென்றால் அது மயக்கம்.

பகலுமில்லை இரவுமில்லை யென்றால் அது சதைப்பசி.

இளமைக்கு இதுதான் மிஞ்சுகிறது.

இது எப்படி, காதலாகும்?

வெறித்தனம் ஓயும்போது வரும் அன்புதான் காதல்.

இளமைக் காதல் கானல் போன்றது.

பிள்ளைகள் பிறந்தபின் பெருகும் காதல் உறுதியானது.

இளமைக் காதலுக்கு இருதயமில்லை

நடுப்பருவக் காதலுக்கு இருதயமே தலைவன்.

கன்னியை மனைவியாக்கிக் கொள்வது பசி.

மனைவியை அன்னையாக்குவது அந்த உணவில் விளைந்த செரிமானம்.

அந்த அன்னையிடம் தந்தை காண்பதுதான் காதல்.

இலக்கியம் இளமைக் காதலைப் பறைசாற்றுகிறது.

சரித்திரம் இளமைக்காதலைச் சாவிலே முடிக்கிறது.

நமது தலைமுறையில் நிறைவேறிய காதலெல்லாம் கசப்பான அனுபவமாக முடிகிறது

எட்டி நிற்கும்வரை இனிக்கிறது.

கட்டி முடித்தபின் கசக்கிறது.

நிறைவேறிய காதலில் நூற்றுக்குத் தொண்ணூறு தோல்வி.

தத்துவம் கிடக்கிறது;

அனுபவம் இதைத்தான் சொல்கிறது:

நிறைவேறாத காதலே அழியாத இலக்கியம்!

காதல் தூய்மையானது, அது தோல்வியடைந்தால்!

காதல் உயர்வானது, அது நிறைவேறாவிட்டால்!

திருமணத்தில் முடிகின்ற காதல், காதலே அல்ல!

தோல்வியுறுவது எதுவோ அதுதான் காதல்!

நடுப்பருவத்தில் வருவது எதுவோ அதுதான் காதல்!

இலக்கியக்காரர்கள் இளைஞர்களுக்கு விளையாட்டுக் காட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

நீங்கள் நம்பாதீர்கள்.

தாய்மையின் குழைவும் தந்தையின் பரிவும் பூமியின் பொறுமையும், பொறுப்புள்ள புன்னகையும், துணைவாடத் தான் வாடும் ஓருயிர் உணர்வும் எங்கே தோன்றுகின்றனவோ, அங்கே வாழ்வதுதான் காதல்!

என் தத்துவம் இதுதான்:

காதல் இரண்டு வகைப்படும்;

ஒன்று தோல்வியுறுவது!

மற்றொன்று முப்பது வயதுக்குமேல் வருவது!

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

வாயிலாக அற்புத ஆய்வுரைகளை அவர் தருவதுபோலவும், அவர்கள் எல்லோரும் வாழ்த்தி வணங்கி வரவேற்பதுபோலவும், அண்ணா அவர்கள் மட்டும் புரிந்துகொள்ளாமல் தவிக்கிறார் என்று வருத்தப்பட்டிருக்கிறார். சிலம்புச்செல்வர்-சிந்தனையின் களஞ்சியம்-இரவல் கருத்துக்களின் இருப்பிடம் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிற கன்னக்கோல் ஆசிரியர், தமிழனுடைய கட்டுரையை மிக உயர்ந்ததென்று வெளியிட்டதற்கு ஒரு முக்கிய காரணம் பின்வரும் குறிப்பாகத்தான் இருக்கவேண்டும். "முன்னது (சுயாட்சி) கற்புப்போல! பின்னது (பிரிவினை அதற்கு எதிரிடையானது (விபச்சாரம்)!" - இந்த உண்மைகளை பெரிய இயக்கத்தின் தலைவர் அண்ணா அறிந்துகொள்ளவில்லையாம்! கண்ணகியின் பெயரிட்ட பந்தலில் திரௌபதை நாட்டியம் ஆடுபவர்கள் என்பது இவர்களுக்குள்ள பழைய சிறப்புப்பெயர்! அந்தப் பத்தினித்தன்மையிலேதான் பிரிவினையை விபச்சாரம் என்று தெரிவித்துள்ளார் கன்னக்கோலார்! திராவிட நாட்டுப் பிரிவினையை விபசாரமாக்கிக் கழகத்தை அதற்கான விடுதியென்று சொல்லிவிட்டதால் மறைமுக விளக்கத்தினால் மாபெரும் சாதனையைக் காட்டியமைக்காகத் தெருவிலே இனிப்புப்பண்டங்கள்கூட வழங்கியிருப்பார்கள் சிலம்பின் செல்வர்கள்! தன்னுடைய பனிரெண்டாவது வயதிலேயே "கலாச்சாரக்கன்னி" தமிழ்நாட்டு மேடைகளில் எத்தனையோ சமயங்களில் எத்தனையோ கட்சிகளுடன் ஓடிவிட்டு வந்த நிலையிலேயே அதன் கற்பு களவாடப்படாமல் காப்பாற்றப்பட்டுள்ளதா என்று கேட்கமுடியும்; ஆனால் கேட்க விரும்பவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அரசியல் தெளிவும், சர்வதேச ஞானமும் பெற்ற யாரும் ஆதரிக்கவில்லையாம்; ஆதரிக்கவும் மாட்டார்களாம்! இதனைச் சொல்லியவர் அரசியல் தெளிவிற்கும், சர்வதேச ஞானத்திற்கும் புறம்பானவர் என்ற உண்மையையும் உரைத்திருந்தால் உளறிக்கொட்டுவதிலே சமர்த்தர் என்று சொல்லியிருக்கலாம்! தமிழகம் தனியே இருக்கமுடியாதென்று அச்சங்காட்டுபவர் இந்தியசீன எல்லைச் சிக்கலால் தனி நாட்டுக் கொள்கை பாதுகாப்புடன் இருக்கமுடியாதென்பதை உணர்த்திவிட்டதாம்! இந்திய சர்க்காரின் ஏமாளித்தனத்தால் லடாக் பறிபோய்விட்டதென்ற உண்மையினை, பண்டிதநேரு ஒப்புக்கொண்டார்! தன்னுடைய தவறுகளுக்கு வேதனைப்படுகிறார்; வெட்கப்படுகிறார்! அகில இந்தியாவைத் தனித்திருக்க விடமாட்டேன் என்று சீனா சொல்லுவதை வரவேற்கும் 'மாநிலத்தலைவரே', பிரிவினை இருக்க முடியாதென்றால், அப்போது சுயாட்சி மட்டும் இருக்கமுடியுமா? திராவிட நாட்டுத் தனி அரசிற்குத் தனியான பாதுகாப்பு அரண்களை வைத்துக்கொள்ளலாம் என்ற கழகத்தின் கருத்தினை மறுப்பதற்கு ம. பொ. சி. இந்தக் காரணத்தைக் காட்டுகிறார். பாபம், அந்தக் காரணம் அவரையே காட்டிக்கொடுக்கிறது. கலாச்சார வீரன் விரும்புவது இந்திய யூனியனுக்குட்பட்ட சுயாட்சி! இந்திய யூனியன் எதிரியின் தாக்குதலுக்கு இரையாகும்போது சுயாட்சியின் பருவத்தோற்றம் என்றும் நிலைத்திருக்க முடியுமா? வெளிநாட்டுப் படையெடுப்பு என்ற நிலை வரும்போது ம. பொ. சியின் சுயாட்சி வேறொரு நேசநாட்டின் உதவியைத் தேவையான நேரத்தில் தேவையான அளவுக்குப் பெற்றுக்கொள்ளமுடியாமல் யூனியனோடு சாகவேண்டியதுதான்! திராவிட நாட்டின் சொந்தப் பாதுகாப்பு சொந்தப் பலத்திலே நிர்ணயிக்கப்பட முடியாவிட்டால் நேசநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் திராவிடத் தனி நாட்டுக்கு உரிமை உண்டு. எதிரிகளை நேரடியாக எதிர்க்கும் உரிமையில்லாத சுயாட்சித் தமிழகம் அந்த உரிமையைப் பெற்றுள்ள திராவிடக் கூட்டரசினைக் கேலி செய்வது, "நான் எவனோடும் போகும்போது நீயும் வர மறுப்பது ஏன்?" என்று எவளோ கேட்பதுபோலஇருக்கிறதே தவிர, அரசியல் தெளிவும் சர்வதேச ஞானமும் குறைந்த அளவில்கூட இருப்பதாகத் தெரியவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை விளக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் புலம்பல் நடையிலே அண்ணாவின் மதுரைப் பேச்சைக் கண்டித்தவர், முன்னேற்றக் கழகத்தின் 'இரட்டை நாக்குப் போக்கினை' சில உதாரணங்களில் விளக்கியிருக்கிறார். அவைகளையும் பார்ப்போம்! முன்னேற்றக் கழகம் பார்ப்பனீயம் ஒழிக என்பதும் பார்ப்பனர்கள் உடன் வர வேண்டுமென்பதும் இரு வேறு கருத்துக்கள்! "தமிழரசு பேசுவேன். அதேபோல் காங்கிரசின்-தாய்ச்சபையின் காலடியில் வீழ்ந்து தயவும் கேட்பேன்" என்று சொன்னதுபோல, சொல்லிக்கொண்டு சிதம்பரம் உத்தமபாளையம் தொகுதிகளில் சுற்றியதுபோல இரட்டைப் பிறவிகளின் நிலையல்ல! "இந்தியனாகவும் இருப்பேன்; தமிழனாகவும் இருப்பேன்!" என்பதுபோன்ற கலப்படஉருவமுமல்ல! தெய்வத்தின் பெயர் சொல்லிப் பிழைப்பவர்கள் சிவஞானக்கிராமணியாக இருந்தாலும் கண்டிக்கத்தக்கவர்களே என்கிறபோது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றுஊரறியக் கழகத்தின்திட்டமாக வைத்துப் பிரச்சாரம் செய்துகொண்டில்லை என்பதையும் இரட்டைப் பிறவிகள், தேசியத்திற்கும் சுயாட்சிக்கும் இரவல் போய்க்கொண்டிருப்பவர்கள் இந்த நேரத்திலாவது புரிந்துகொள்வது நல்லது! காந்தீயத்தைக் கண்டித்துவிட்டு அவரின் திட்டங்களிலே ஏற்பட்ட தோல்விப்பட்டியலைப் பார்த்துவிட்டுக் காந்தியாரின் சிலையைத் திறப்பது அவரது உள்ளத்தைப் பாராட்டுவதற்காக! காந்தியாரைக் கண்டித்தபோதும் அவரைப் பற்றியல்ல; அவருடைய கருத்துக்களைப் பற்றித்தான் என்பதை 'கிராமணியார்' என்ற "தவல்புதல்வர்" உணரவேண்டும்! அறிஞர் அண்ணாவின் அடுக்குமொழிகளின் அழகினைப் படித்துப் பார்த்துவிட்டுத் திரும்பச் சொல்லிப் பழகும் வேளையில், காந்தியாரைப் பற்றிய அண்ணாவின் கருத்துக்களையும் காணட்டும்! 1946-ல்காமராசரைஎதிர்த்துவிட்டு, 1952-ல் அவருடைய கருணைக்காகக் காத்திருந்து சேவைசெய்துவிட்டு, 1957-ல் முரசு கொட்டியதுபோல, காந்தீயம்-காந்தியார் பற்றிய கழகத்தின் கருத்துக்கள் அமையவில்லை என்பதையும் (அவரே சொன்னதுபோல) தமிழரசுக் கழகத்தையும் கன்னக்கோலையும் குழந்தைகளாக வளர்த்துக்கொண்டிருப்பவர் தெரிந்துகொள்ள வேண்டும்! நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டியது முன்னேற்றக் கழகம். அதனை 'செருப்பு' என்பவர் சிலம்புச்செல்வரென்றால் தமிழகம் அந்தத் தலைவரை தரங்கெட்டவர் என்று மதிக்க நேரிடுமே என்பதற்காக உண்மையில்வருந்துகிறேன். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லையென்று சொன்னால், தொடருங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் அவர்தம் தம்பியரும் கழகத்தின் கொள்கைகளைப் பொது மக்கள் தெரியாதபடி குழப்புகிறார்களாம். கழகம் சொல்வதைப் புரிந்துகொள்ளும திறனற்றவர்கள் எல்லோரும் சொல்வதைத்தான் கன்னக்கோலரும் சொல்கிறார்! வேறு சிலருடைய வெகுசனப் பார்வைகள் கழகக் கொள்கைகளைத் தெரிவிக்கப் புத்தகம் வெளியிடப்படவில்லை என சில நாட்களுக்கு முன்புவரை சொல்லவில்லையா, அதுபோலவே இவர்கள்-கண்ணகியின் கற்புக்குக் கடை வைத்திருப்பவர்கள் - புதுக்கதை சொல்கிறார்கள்! கண்ணகியின் கற்புக்கு விளம்பர ஏசண்டுகள் தேவையில்லையென்றாலும் தங்களை அந்தச் சேவை செய்யப் பழக்கிக்கொண்டிருப்பவர்கள் இலட்சியப் பிடிப்பையும் கொள்கை விளக்கங்களையும் குழப்பம் என்கிறார்கள்! கழகத்தின் கொள்கைகள் இருக்கின்றன என்பதையாவது ஏற்றுக்கொண்டார்களோ? தமிழரசுக் கழகத்தின் பன்னிரண்டு வயது கொள்கை வளர்ச்சியில் எவருக்கும சந்தேகம் வருவதில்லையே! காரணம்-அதிலே உள்ள தெளிவா? உயர்வா? சிறப்பா? அல்லவே! இந்தியாவுக்கும் சீனத்திற்கும் இடையிலே ஒரு சூனியப் பிரதேசம் வேண்டுமென்று சீனப் பிரதமர் சொல்கிறாரே, அதுபோல திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழ்நாட்டு அரசியலுக்கும், மற்ற அரசியல் கட்சிகளுக்கும் தமிழ்நாட்டு அரசியலுக்கும் இவைகள் சூழ்ந்து கவர்ந்துள்ள மிகப் பெரிய பொதுமக்களின்செல்வாக்குப் பகுதிக்கும் இடையிலே எவருடைய நடமாட்டமும் இல்லாமல் ஒரே தலைவர் உலாவிக்கொண்டுள்ள பகுதியாகத் தமிழரசுக் கழகம் இருக்கிறதென்ற உண்மையினால்தான்! இந்த சூன்யப் பிரதேசத்திலேதான் சுயாட்சித் தமிழகம் செழித்து வளரப்போகிறதென்று தமிழ்மக்கள் நம்பவேண்டுமாம்! சுயாட்சி உயிரோட்டம் இல்லாத உடலாக இருக்கும் வகையில் திராவிடத் தனி நாட்டுக் கிளர்ச்சி உறுதியோடும் சிறப்போடும் வளரப்போகிறது! காலங்கடந்த இந்த வேளையிலாவது தமிழரசுக் கொடி பிடிப்போரும் "சுயாட்சியா? பிரிவினையா?" என்று குரல் கொடுப்போரும் எதிர்காலத்தின் நிலையினைக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும்! இதனைச் செய்யாமல் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களிலே பலரைப்போல, தமிழரசுக் கழகத்தின் தீவிரத் தொண்டர்கள், "யார் இந்தக் கூடலரசன்?" என்று கேட்பதில் எந்தவித நட்டமும் எனக்கில்லை! ★

திருக்குறள் கட்டுரைப் போட்டி

ஆம்பூர் திருவள்ளுவர் சழகத்தின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி, ஓர் திருக்குறள் கட்டுரைப் போட்டி நடத்தப்படுகிரது இப்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களும், பிற பொதுமக்களும், 'திருவள்ளுவர் கண்ட நாடு' என்ற தலைப்பைக் குறித்து 125 முதல் 150 வரிகளுக்கு மேற்படாமல் எழுதித் தங்கள் முகவரியுடன் (மாணவர்கள் தங்கள் பள்ளி முகவரியை எழுதவேண்டும்) அனுப்பவேண்டும.

மாணவர்களின் சிறப்புடைய கட்டுரைக்கு ஒரு பரிசும், மற்றப் பொதுமக்களின் சிறப்புடைய கட்டுரைக்கு ஒரு பரிசும் வழங்கப்படும். வடாற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கட்டுரைகள் 31-12-'59 க்குள், '**திருக்குறள் கட்டுரைப் போட்டிக் குழு, திருவள்ளுவர் கழகம், ஆம்பூர் (வ. ஆ)**' என்ற முகவரிக்கு அனுப்பும்படி செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

வினு : யாரு? கண்மணியா? உண்மைதானா?

கம : அண்ணியா? அண்ணியே தானா?

கண் : (அருகில் வந்து) ஆமாம்மா. அண்ணியேதான்; கண்மணியே தான்!

வினு : அப்புடின்னா கொஞ்ச நேரத்துக்கு முன்னால வந்த கடிதம்?

கண் : நான் எழுதினதுதான். நான் அப்படி எழுதாட்டி, நீங்க இப்ப கமலாவை பூபதிக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறதா உங்க அப்பாவுக்குத் தந்தி குடுப்பீங்களா...?

வினு : அப்ப நீ எல்லாத்தையும் பார்த்துக்கிட்டா இருந்தே?

கண் : பின்னே!....பாருங்க....நான் வேற கல்யாணம் செய்துக்கறேன்'னதும் உங்களுக்கு எவ்வளவு கோபமா, ஆத்திரமா, அழுகையா வந்துது. அதுமாதிரித்தானே கமலாவுக்கும் இருந்திருக்கும்! அதை யோசிச்சுப் பார்த்தீங்களா?

வினு : கண்மணி! நீ என் கண்ணைத் திறந்துட்ட.....என்னை மன்னிச்சுக்க! நீ உண்மையிலேயே வேற கல்யாணம் பண்ணிக்கப் போகலியே...?

கண் : சரிதான் போங்க. உங்களுக்கு இன்னும் சந்தேகம் போகலையா...? ஏன் கமலா, நீதான் உங்க அண்ணனுக்குச் சொல்லேன்!

வினு : அப்ப, இது அவளுக்கும் தெரியுமா? நீங்க ரெண்டுபேரும் சேர்ந்து நடிச்ச நாடகம்தானா இது! திருட்டுக் கழுதைங்களா... உங்களைக் கல்யாணத்தில் என்ன பண்றேன் பாருங்க!

என்று சிரிக்கிறார். அவர்களும் சிரிக்கிறார்கள்.

—திரை—

"பாதியில் நின்ற பாட்டு" பின்னர் வரும்.

ஜுபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
மதுரை.

— முன் இதழ்த் தொடர்ச்சி —

நகரத்தின் நடுவில் அமைந்திருந்த கவர்னர் மாளிகை தாக்கப்பட்டது. மன்னனின் கையாளும் கொடுங்கோலனுமான வான்மானென் அன்று ஊரில் இல்லாததால் உயிர் தப்பினன். அதற்கு எதிரில்அமைந்திருந்த சிறைச்சாலை தவிடு பொடியாகத் தகர்க்கப்பட்டது. சிறை வைக்கப்பட்டிருந்த புரட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பிரசல்சு நகரில் இருந்த அரண்மனையையும் தாக்கித் தகர்க்க முயற்சி நடைபெற்றது. ஆனால் அதற்குள் டச்சுப் படைகள் விரைந்து வந்து விடவேஅம்முயற்சி கைவிடப்பட்டது. என்றாலும் இரவு முழுவதிலும் தொடர்ந்து புரட்சி நடைபெற்றது.

கறுப்பு, மஞ்சள், சிகப்பு ஆகிய நிறங்கள் கொண்ட பெல்சிய தேசியக் கொடி எங்கும் பறக்கவிடப்பட்டது. டச்சுக் கொடிகளும் அரசாங்க சின்னங்களும் நெருப்பிலிடப்பட்டன. தெருக்கள் யாவும் களங்களாகக் காட்சி தந்தன.

பொழுது புலர்ந்தது. புரட்சிக்காரர்களின் கை மேலோங்கிக் கொண்டிருந்தது. நிலைமை முற்றுவதைக் கண்ட மிதவாதிகளும், முதலாளித்துவ வர்க்கமும் அஞ்சி நடுங்கினர். தங்களது ஆண்டை வாழ்விற்கு எங்கே ஆபத்து நேரிட்டுவிடுமோ எனப் பதைத்தனர். ஆண்டை வாழ்வு பறி போவதைவிட டச்சு அடிமையாக இருப்பதையே அவர்கள் உள்ளூர விரும்பினர். அன்னக்காவடிகளால நடத்தப்படும் விடுதலைக் கிளர்ச்சியைக் கண்டால் முதலாளித்துவம் நடுங்குவது இயற்கைதானே. எனவே அவர்கள் Hotel de Villie என்னுமிடத்தில் கூடி மன்னனுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

கலகக்காரர்களால் உருவாக்கப்பட்ட டச்சு வெறுப்புணர்ச்சி நிலைத்து நிற்காது என அவர்கள் அரசனுக்கு முதற்கண் அபயம் அளித்தனர். பின்னர் சில குறைகளை நிவர்த்தி செய்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற ஆலோசனையையும் அரசனுக்கு இவ்வேண்டுகோள் மூலம் வழங்கினர். மேலும் மன்னனின் அருள் நிறைந்த அன்புள்ளம் இக்குறைகளைக் களைந்தெறிந்து ஆவன செய்யும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகக் கூறி, அதன்மூலம் தங்களது இராச விசுவாசத்தை இந்தத் துரோகிகள் காட்டிக்கொண்டனர். முதலாளித்துவத்தின் பிரதிநிதிகளான அவர்களுக்குத் தேசிய உணர்ச்சி எப்படிப் பிறக்கும் ?

ஆனால் இவர்கள் எந்தக் கால்களுக்கு முத்தமிட்டனரோ, அதே கால்கள் இவர்களை எட்டி உதைத்தன. அரசன் அவர்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்தான். மேலும் அடக்குமுறையை உபயோகிக்கத் திட்டமிட்டான். இதற்கிடையில் கவர்னரான வான்மானென். நிலைமை முற்றுவதைக் கண்டு அஞ்சிப் பதவி விலகத் தீர்மானித்தான். ஆனால் ஆணவம் தலைக்கேறிய அரசனே அதை ஏற்க மறுத்து அஞ்சாதே என்று அபயமும் அளித்தான்.

அரசனை இடித்துரைத்து நல்வழி காட்டவேண்டிய டச்சு அமைச்சர்களிடமும் ஆதிக்க வெறிதலை விரித்து ஆடிககொண்டிருந்தது. புரட்சிக்காரர்களிடம் இரக்கம் காட்டுவது தற்கொலைக்கு ஒப்பாகும் என அவர்கள் மன்னனுக்கு எச்சரிக்கை செய்தார்கள். கலவரங்களை உடனடியாக நிறுத்திப் புரட்சிக்காரர்கள் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தால் ஒழிய அரசாங்கம் கருணை காட்டக்கூடாது என அவர்கள் ஆணவமொழிபேசினர். ஆனால் பட்டத்திளவரசனான ஆரஞ்சு இளவரசன் தனது தந்தைக்குச் சிறந்ததோர் அறிவுரை வழங்கினன். வான் மானெனின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டு உடனடியாகச் சில சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவரும்படி கூறினன். படைபலத்தை உபயோகிக்குமுன் சமாதானமுறைகளைக் கையாளும்படி வேண்டினன். ஆனால் அவனது அறிவுரைகளுக்குச் செவிசாய்க்க மன்னன் மறுத்தான். பெரும்படையொன்றை பெல்சியத்திற்கு அனுப்பத் திட்டமிட்டான்.

இதற்கிடையில் விடுதலைப் புரட்சி நாடெங்கும் பரவிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே விடுதலைப் படைகள் அமைக்கப்பட்டன. அழகும் அமைதியும் குடிகொண்டிருந்த சிற்றூர்கள் எல்லாம் போர்க்கோலம் பூண்டன. "Brabanconne" என்னும் பெல்சிய தேசிய கீதம் நாடெங்கும் ஒலித்தது. விடுதலைக் கிளர்ச்சி வெற்றித் தலைவாயிலை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

டச்சுச் சுரண்டலை ஒழிக்கச் சூளுரைத்துக் கிளம்பியிருக்கும் புரட்சிக் கூட்டம், உள்நாட்டில் தங்களது சுரண்டலுக்கும் முற்றுப்புள்ளி வைத்

பெல்சிய மக்கள் போராடிய வீரஞ்செறிந்த வரலாற்றைப் படிக்கும்போதே மெய்சிலிர்க்கும். விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் அதைப் படித்தால் புத்துணர்வு பெறுவர். கோழைகளும், துரோகிகளும்கூட புதியதொரு உணர்ச்சியைப்பெற்றுத் துள்ளியெழுந்து விடுதலை முழக்கம் புரிவர். தியாக பலி பீடத்திலே எண்ணற்ற உயிர்களைப் பலியாகக் கொடுத்து, பெல்சிய மக்கள் விடுதலையைப் பெற்றனர். குருதியால் எழுதப்பட்ட அந்த வரலாற்றைச் சற்று காண்போம.

புரட்சிக்காரர்களின் கைவசம் இருந்த பிரசல்சு நகரில் டச்சுப்படைகளால் நுழையவே முடியவில்லை. வீடுகள் தோறும் பாசறைகளாக மாறிக் காட்சி தந்தன. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகத் துப்பாக்கிகளைத் தோளில் ஏந்தினா. வீதிகள் யாவற்றிலும் பெருமரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டுத் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. விடுதலைபெற்ற பெல்சியத்தில் வாழ்வோம் அல்லது அந்த மண்ணிலேயே வீழ்ந்து மடிவோம் என பிரசல்சு நகரமக்கள் உறுதிகொண்டிருந்தனர். இந்த மாறாத மனவுறுதியைக் குலைக்க பிரடிரிக்கின் படைகள் எவ்வளவோ முயன்றன.

௨௩_ வாண வேடிக்கை
௨௪_ விளக்கு வரிசை
௨௫_ விடுதலைப் புரட்சி

... "ஆம்! ஆம்!" என்கிறர்
தோழர் ப. நெடுமாறன்.

தால் என்ன செய்வது எனப் பணம் படைத்தவர்கள் பதைக்கத் தொடங்கினர். எனவே மீண்டுமொருமுறை மன்னனிடம் தூதுக்குழு ஒன்றை அனுப்பினர்.

டச்சு மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்வதாக இத்தூது குழுவினர் கூறினர். மேலும் ஆலந்திற்கு உட்பட்ட நாடாக பெல்சியம் விளங்குமென்றும் எனினும் நிர்வாக நலனிற்காகப் பெல்சியம் தனி மாநிலமாகக் கருதப்பட வேண்டும் என்றும் இவர்கள் கூறினர். பெல்சியத்தின் கவர்னராகப் பட்டத்திளவரசனை ஏற்றுக்கொள்வதாகவும் இவர்கள் மன்னனிடம் எடுத்துரைத்தனர். இந்தக் குறைந்தபட்சக் கோரிக்கைகளைக் கூட ஏற்க மன்னன் மறுத்தான். புரட்சியை எப்படியும் அடக்கியொடுக்குவது என்றுதிட்டமிட்டான்.

ஆகஸ்டு மாதம் 30-ம் தேதியன்று ஒன்பதினுயிரம் வீரர்களையும், 20 பீரங்கிகளையும் கொண்ட படையொன்றைத் தனது இரண்டாவது மகன் பிரடிரிக் தலைமையில் அனுப்பி வைத்தான். இந்தப் படையைக் கண்டு பெல்சிய மக்கள் அஞ்சவில்லை.

கொடுமைக் குன்ருன பிரடிரிக் இளவரசனின் படைகளை எதிர்த்து, மூன்று நாட்கள் இரவும் பகலும் கடுமையான போராட்டம் நடைபெற்றது. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிற்று. பெல்சிய விடுதலை வீரர்களின் சவங்களின்மீது அங்குலம் அங்குலமாகத்தான் டச்சுப் படைகளால் முன்னேற முடிந்தது.

இதற்கிடையில் சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்து அணி அணியாகப் புரட்சிப்படைகள் பிரசல்சு வந்து சேர்ந்த வண்ணம் இருந்தன. குறிப்பாக லீஜ் மாவட்டததில் இருந்து ரோசியர் என்ற தீரமிக்கத் தளபதியின் தலைமையில் புரட்சிப் படைகள் வந்து சேர்ந்தன. நெப்போலியனின் படையில் தளபதியாகப்பணியாற்றிய ஜுவான் வான் ஆலன், மெலினட் ஆகியோர் பிரசல்சு வந்து சேர்ந்து புரட்சிக்காரர்களுக்குத் தலைமை வகித்தனர். தலைவர்களைக் கண்ட மக்களின் உற்சாகம் மேலும் அதிகரித்தது. டச்சுப் படைகளின் முகாமை இரவோடு இரவாகச் சென்று தாக்குவதற்காக ஒரு திட்டம் தயாராகியது. செப்டம்பர் 27-ம் நாள் அதிகாலையில் உற்சாக மிக்க இளைஞர்கள் சிலர் இத்தீரச் செயலை செய்துமுடிக்கக் கிளம்பினர். பதுங்கிப் பதுங்கிச் சென்ற அவர்களை ஏமாற்றம் எதிர்கொண்டழைத்தது. இரவோடு இரவாக பிரடிரிக் தனது படைகளுடன் பின்வாங்கிச் சென்றிருந்தான். புரட்சிக்காரர்களின் உறுதியையும், உற்சாகத்தையும் கண்டபிறகு அவன் இந்த முடிவிற்கு வந்திருந்தான். இந்த வெற்றிச் செய்தியைக் கேட்டு பெல்சியநாடே பெரும் உற்சாகம் கொண்டது. ஆங்காங்கே இருந்த டச்சு அதிகாரிகள் உடனடியாக விரட்டப்பட்டனர். எதிர்த்து நிற்க முயன்றவர்களின் உயிர்களுக்கு ஆபத்து நேர்ந்தது. மூன்று வார காலததிற்குள் பெல்சியம் முழுவதிலுமே விடுதலைக் கொடி பறநதது. ஆன்ட்வெர்ப்,மாஸ்டிரிஷ்ட் நகரங்கள் மட்டுமே டச்சு ஆதிக்கத்தில் எஞ்சியிருந்தன.

சுதந்திர அரசாங்கம் ஒன்றை உடனடியாகப் புரட்சிக்காரர்கள் அமைத்தனர். ஆலந்திலிருந்து பெல்சியம் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டுச் சுதந்திர நாடாக வாழத் தொடங்கிவிட்டது என்ற நற்செய்தியை சுதந்திர அரசாங்கத் தலைவர் டி-போர்ட்டர் உலகிற்கு அறிவித்தார். சுதந்திர அரசாங்கத்தை அங்கீகரிககுமாறு வல்லரசுகள் வேண்டிக்கொள்ளப்பட்டன. கூடிய விரைவில் தேசிய அரசியல் நிர்ணய சபை ஒன்றைக் கூட்டவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையில் புறமுதுகிட்டு ஓடிய ஆதிக்க வர்க்கம் இன்னும் தனது நப்பாசையைக் கைவிடவில்லை. ஆதிக்கவெறி டச்சுக்காரர்களிடம் இருந்து மறையவில்லை. புரட்சிக்கொடி ஏந்தியிருக்கும் பெல்சிய மக்களை ஏமாற்றச் சில கண்துடைப்புத் திட்டங்களை டச்சு அரசாங்கம் தயாரித்தது. பெல்சியத்திற்குத் தனி அரசாங்கம் அமைக்கும் ஏற்பாடுகளைச் செய்யக்குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனல் விழிப்பு மிக்க பெல்சிய மக்கள் காலங்கடந்த இந்தத் திட்டத்தை ஏற்கத் தயாராக இல்லை. எனவே டச்சுப் படைகளிடம் எஞ்சியுள்ள பெல்சியப் பகுதிகளை ஆள்வதற்காக ஆரஞ்சு இளவரசன் அனுப்பப்பட்டான்.

ஆன்ட்வெர்ப் நகருக்கு வந்தவுடன் அவன் அறிக்கையொன்றை வெளியிட்டான். விடுதலைப் படையினரின் கைவசமுள்ள தென்பகுதிக்குப் பூரண விடுதலை அளித்திருப்பதாகவும், தங்களுக்கு ஏற்றமுறையில் அரசாங்கமொன்றை பெலசியர்கள் அமைத்துக் கொள்ளலாம் என்றும், கல்வி நிலையங்களில் அரசாங்கத் தலையீடு நிறுத்தப்படும் என்றும, அரசியல் குற்றவாளிகள் அனைவரும் மன்னிககப்படுவர் என்றும் அந்த அறிக்கை கூறியது. சுதந்திர அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுக்களையும் அவன் நடத்தினன். இங்ஙனம் பிரச்னையை அமைதியாகத் தீர்க்கவேண்டிய நடவடிக்கைகளை இளவரசன் மேற்கொண்டிருந்தபோது ஆதிக்க வெறிபிடித்த மன்னன் சதிச்செயல்களில் ஈடுபட்டிருந்தான். பிற வல்லரசுகளை அணுகித் தனக்குத் துணைபுரியும்படி வேண்டிக்கொண்டான். வியன்னு காங்கிரசு முடிவுப்படி பெல்சியம் தனக்கடங்கியதே என்றும், எனவே அம்முடிவை நடைமுறைக்குக் கொண்டு வருவது பிற வல்லரசுகளின் கடமையென்றும் அவன் வற்புறுத்தினன். ஆயுதம் தாங்கிப் போராடத் தயாராகும்படியும்ஆலந்து மக்களை வேண்டிக்கொண்டான்.

— 11-ம் பக்கம் —

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

ச. பா. சித்திரவேலு,
வேலணை மேற்கு.

திரைப்பட உலகிற்குத் தங்களை அறிமுகஞ் செய்துவைத்தவர் யார்?

டைரக்டர் கே. ராம்நாத் அவர்களும் ஜூபிடர் பிக்சர்சிலிருந்த வெங்கிடசாமி அவர்களும்.

★

எம். எஸ். ஹுஸைன்,
தெமட்டகொடை.

இப்பொழுது என்ன படம் தயாரிக்கிறீர்கள்? நடிக, நடிகையர் யார்?

"கவலையில்லாத மனிதன்" படப்பிடிப்பு நடந்துகொண்டிருக்கிறது. டி. ஆர். மகாலிங்கம், சந்திரபாபு, எம். ஆர். ராதா, டி. எஸ். பாலையா, ராஜசுலோசனா, எம். என். ராஜம் முதலியோர் நடிக்கின்றனர்.

★

எம். பாபு, கொழும்பு-13.

உங்கள் விலாசம் என்ன?

கண்ணதாசன், 142, முதல் மெயின் ரோடு, சி. ஐ டி. காலனி, சென்னை-4.

★

கே. ஏ. முகம்மது மஹ்ரூப்,
வெள்ளவத்தை.

ஈழத்திலும் இனிமேல் தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்போகிறோம். அதற்கு வேண்டிய கதைகள், வசனங்கள் எழுதித்தர நீங்கள் முன்வருவீர்களா?

அழகும் செழிப்பும் கொழிக்கும் இலங்கைக்கு வர மறுப்பேனா?

★

எம். சிவனு, பெல்டன் பெக்டரி.

தங்களின் வாழ்க்கை வர்ணனையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

"கண்ணதாசன் கட்டுரைகள்" என்று ஒரு புத்தகம் வெளியாகியிருக்கிறது. அதில் என் வாழ்க்கை வர்ணனையை நானே எழுதியிருக்கிறேன். அதை வாங்கிப் படித்துப் பாருங்கள்.

★

ஏ. எல். எம். அன்சார்,
அம்பாந்தோட்டை.

தி. மு. க. அதாவது திரையுலக முன்னேற்றக் கவிஞர் என்று தங்களைக் கூறுகிறார்களே, அதன் நோக்கம் என்ன?

அன்பைத்தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்.

சென்னைக் கல்லூரிகள்
தமிழ்மன்றம்
"கவிதை அரங்கம்"

அரங்கத்திற்கான கவிதைகளை 16-12-'59-க்குள் செயலாளர் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு, கல்லூரி மாணவர்களை வேண்டிக்கொள்கிறோம்.

அன்புள்ள,
கா. வேழவேந்தன்.

அனுப்பவேண்டிய முகவரி:
ஆரூர் ஆனந்தன்,
எம். ஐ. டி.,
குரோம்பேட்டை.

கே. எம். ஜகுபர், பள்ளேபொள.

கட்சியால் கலை கெடுகிறது என்று சிலர் கூறுகிறார்களே. அவர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

அவர்கள் கட்சியிலும் வளர முடியாமல், கலையிலும் வளர முடியாமல் கண்கலங்கி நிற்பவர்கள்.

★

கே. புவனேஸ்வரி, சாவகச்சேரி.

தங்களின் வாழ்க்கையில் பொறுக்கமுடியாத துன்பம் ஏற்பட்டதுண்டா?

சாவைப்பற்றிக்கூட ஒரு நாள் சிந்தித்திருக்கிறேன். அதனால்தான் வாழ்வைபபற்றிப் பிறருக்கு இன்று போதிக்கச் சக்தி உள்ளவனாக இருக்கிறேன்.

★

க. மெய்யழகன், அனுராதபுரம்.

ஒருவன் கவிஞனாவதற்கு ஊக்கமும் ஆர்வமும் இருந்தால் போதுமா? அல்லது இத்துடன் இயற்கையாகவே கவித்துவம் பெற்றிருக்கவேண்டுமா?

அது ஒரு இயற்கைச் சக்தியாகவே எனக்குத் தோன்றுகிறது.

★

அ. அ. வாஹிட்,
காத்தான்குடி-4.

உங்கள் சொந்த ஊர் எது?

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிறுகூடற்பட்டிக் கிராமம்!

★

சிவ. கிருஷ்ணசாமி.
கோணவலை.

நீங்கள் சினிமாவில் நடித்தால் என்ன?

நடித்திருக்கிறேன் "பராசக்தி"யில்! நடித்துக்கொண்டிருக்கிறேன்—"கவலையில்லாத மனிதனி"ல்!

★

ஐ. எஸ். அகமது, காத்தான்குடி.

தாங்கள் எழுதிய கதையில் புகழ்பெற்ற கதை எது?

பத்திரிகையில் "வேலங்குடித் திருவிழா!" சினிமாவில் "மதுரை வீரன்!"

★

கே. எஸ். குழந்தைவேலு,
வேலணை.

நீங்கள் இயற்றிய பாடல்களில் அதிகப் புகழீட்டியவை எவை? அவை யாரால் பாடப்பட்டன? எந்தெந்தப் படங்களில்?

"இல்லற ஜோதி"யில் ஜிக்கி பாடிய "உனக்கும் எனக்கும் உறவு காட்டி" என்ற பாட்டு, "அம்பிகாபதியில்" பானுமதி பாடிய "கண்ணிலே இருப்பதென்ன" என்ற பாட்டு, "மாலையிட்ட மங்கை"யில் மகாலிங்கம் பாடிய "செந்தமிழ்த்தேன் மொழியாள்" "திராவிடப் பொன்னாடே" ஆகிய பாடல்கள்.

★

எஸ். நடராஜா, பொல்காவலை.

தாங்கள் முதன் முதலாகக் கதை வசனம் எழுதிய படம் எது?

"இல்லற ஜோதி"

எஸ். எம் மீரான், கொழும்பு-11.

தாங்கள் கவிதைகள் இயற்ற எத்தனை வயதில் முற்பட்டீர்கள்?

எண்ணிரண்டு பதினாறு முடியும்போது எழுதினேன் முதற் கவிதை.

★

ஏ. முஹம்மத் ஸியாத், கண்டி

நீங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்? உங்களுக்கு ஆண்டவன் ஒருவன் உண்டா?

மனிதத்தன்மை என் மதம்; உருவமற்ற ஆதி முதல்வன் என் ஆண்டவன்.

★

கருணை, பண்டாரவளை.

அரசியலில் கலைஞர்கள் ஈடுபாடு கொள்ளலாம் என்று சொல்லும் நீங்கள் சரியான காரணங்களைத் தந்து விளக்க முடியுமா?

வியாபாரிகள், மத வாதிகள், நிலச்சுவான்தார்கள், தொழிலாளிகள் எல்லோரும் ஈடுபடும்போது கலைஞர்கள் ஏன் அரசியலில் ஈடுபடக்கூடாது?

★

இளங்குமரன், யாழ்ப்பாணம்

கலைஞனுக்குக் கட்சி தேவையில்லை என்று சிலர் கூறுகிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன?

இருக்கலாம். ஆனால் எங்கே போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு கொள்கை தேவையில்லையா?

★

ஏ எம். பாயிஸ் தர்காடவுன்.

அண்ணா! நீங்கள் இலங்கைக்கு எப்போது வருவீர்கள்?

பொங்கல் விழாவுக்கு வருவேன்.

★

எஸ். செல்லையா,
அம்மலாங்கொடை.

சிலை வணக்கத்தில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா?

என்ன அதிசயமோ தெரியவில்லை. சிறு வயதிலிருந்தே எனக்கு நம்பிக்கையில்லை.

★

கா. வேலு கல்கிசை

உங்கள் மனைவியின் பெயர் என்ன? எத்தனையாவது வயதில் திருமணஞ் செய்துகொண்டீர்கள்? குழந்தைகளுண்டா?

மனைவியர் இருவர். பெயர்கள் முறையே பொன்னழகி, பார்வதி. இருபத்திமூன்று வயதிலும், இருபத்திஐந்து வயதிலும் திருமணங்கள் நடந்தன. மூத்தவளுக்கு நான்கு குழந்தைகள்; அடுத்தவளுச்கு ஐந்து குழந்தைகள். பெயர்கள் முறையே, முத்தாத்தாள், காந்தி, கமால் அட்டாடர்க், சுப்பையா, அண்ணாத்துரை, தேன்மொழி, ரேவதி, சீனிவாசன், கலைவாணன்.

★

தமிழ்நாடு விலைவாசிக் குறைப்பு சர்வ கட்சிக்குழு

1—12—'59 ல் நடந்த கூட்டச் செய்திகள்.

தமிழ்நாடு விலைவாசிக் குறைப்பு சர்வ கட்சிக் குழுக் கூட்டம் 1--12-59 மாலை 4-மணிக்கு சென்னையில் கூடியது. கூட்டத்திற்கு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். குழுவில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

கூட்டத் தொடக்கத்தில் மாநில சர்வ கட்சி குழுவின் வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் விலை வாசிக் குறைப்புக் கிளர்ச்சி வாரம் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ள விவரங்களை கன்வீனர்களில் ஒருவரான தோழர் எம். ஆர். வெங்கட்ராமன் கொடுத்தார். மாநில முழுவதும் செயல்பட்ட சர்வ கட்சிக்குழு அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முதலில் நிறைவேற்றப்பட்டது.

மாநில முதலமைச்சரையும் உணவுத்துறை அமைச்சரையும் மீண்டுமொரு முறை சந்தித்துப் பேசிய பிறகு அடுத்த நடவடிக்கைகளைப்பற்றி முடிவு செய்யலாமென்று சர்வ கட்சிக்குழு கருதியது. விரைவில் ஒரு நாளைக் குறித்துத் தெரிவிக்குமாறு ஏற்கனவே முதலமைச்சருக்குக் கடிதம அனுப்பப்பட்டுள்ளது. நவம்பர் 30-ந்தேதிக்குப் பிறகு உணவுத்துறை அமைச்சர் டெல்லியிலிருந்து திரும்பியவுடன் சந்திப்பதற்கு வசதியான தேதியைத் தெரிவிப்பதாக அரசினரிடமிருந்து தகவல் வந்துள்ளது.

அடுத்து நடைபெறும் சட்ட சபைக் கூட்டத்தில் விலைவாசிக் குறைப்பு நடவடிக்கைகளை வற்புறுததுவதற்காக எதிர்க் கட்சிகளின் சட்ட சபைத் தலைவர்களையும் கலந்தாலோசித்த பிறகு உரிய நடவடிக்கைகளைப்பற்றி முடிவெடுப்பதெனக் கூட்டம் தீர்மானித்தது.

தீர்மானங்கள்.

1. மாநில உணவு விலைக் குறைப்பு சர்வ கட்சிக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க நவம்பர் 15-முதல் 22-முடிய விலை குறைப்புக் கிளர்ச்சி வாரத்தை எல்லா இடங்களிலும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தியதின் மூலம் வெற்றிகரமாகவும ஒற்றுமை உணர்வுடனும் நிறைவேற்றித் தந்த சர்வ கட்சி ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் இந்தக் கூட்டம் தனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

2. கூடிய சீக்கிரம் சட்ட சபை எதிர்க்கட்சித் தலைவர்களை கலந்தாலோசிக்கவும், முதலமைச்சரையும் உணவுத்துறை அமைச்சரையும் மாநில சர்வ கட்சிக்குழு நியமித்துள்ள தூதுக் குழுவினர் சந்திக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், பேட்டிக்குப் பிறகு மேல் நடவடிக்கைகளைப் பற்றி மாநில சர்வ கட்சிக்குழு முடிவு செய்ய உடனடியாகக் கூடுவதென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மாநில சர்வகட்சிக் குழுவின் முடிவுகள் நிர்ணயமானவுடன் அறிவிக்கப்படும்.—இவ்வாறு சர்வ கட்சிக்குழு கன்வீனா திரு எம். ஆர். வெங்கட்ராமன் அறிவிக்கிறார்.

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

எரியும் நெருப்பில் மேலும் எண்ணெய் வார்ப்பதுபோன்ற இச்செயல்களால் பெல்சிய மக்களின் ஆத்திரம் பெருகியது. இதனை அறிந்த ஆரஞ்சு இளவரசன் ஆருத வேதனைக்கு ஆளானான். தனது தந்தையின் உள்ளத்தை அவன் நன்கு புரிந்து கொண்டான். நியாயத்திற்காகப் போராடுவது என்ற முடிவிற்கு வந்தான். பெல்சிய விடுதலை இயக்கத்திற்குத்தானே தலைமை தாங்குவது என்ற முடிவிற்கு வந்தான். பெல்சிய சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகவும், பெல்சியர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பேணிக் காத்துக் கொள்ளத் தன்னால் இயன்ற உதவி செய்வதாகவும் அவன் அறிவித்தான்.

இந்த அறிக்கையைக் கண்டு ஐரோப்பா வியந்தது. ஆலந்துமக்கள் திடுக்கிட்டுப் போயினர். அவனது தந்தை வில்லியம் அளவுகடந்த ஆத்திரத்தை அடைந்தான். ஆனால் பெல்சிய விடுதலை அரசாங்கமோ அதை அலட்சியம் செய்தது. வரலாற்றுச் சிறப்புடைய அதனது பதிலில்பின் கண்டவாறுகுறிப்பிட்டது: "ஆரஞ்சு இளவரசரே! தங்களது உதவிக்கு எங்கள் நன்றி. ஆனால் காலங் கடந்துவந்த தங்களது உதவியை நாங்கள் ஏற்பதற்கில்லை. பிறரிடமிருந்து உதவியைப் பெறும் கட்டத்தை நாங்கள் தாண்டிவிட்டோம். ஏற்கெனவே தியாகத்தை விலையாகக் கொடுத்து விடுதலையைப் பெற்றுவிட்டோம். வீரமிக்க பெல்சிய இளைஞர்களின் குருதியிலே தோய்ந்த எங்கள் விடுதலைக்கொடி கம்பீரமாக வானளாவிப் பறக்கத் தொடங்கிவிட்டது. அதை வீழ்த்த இனி எந்த ஆதிக்க சக்தியாலும் முடியாது. உயிரை ஈந்தாவது பெல்சிய மண்ணின் தன்மானத்தைக் காப்பது என்று தீரமிக்க பெல்சிய மக்கள் உறுதி பூண்டுவிட்டனர். மண்ணும் விண்ணும் திங்களும் மதியும் இருக்கும்வரை பெல்சியமும் சுதந்திரமாகவே இருக்கும். இனி யாருக்கும் அது தலை வணங்காது."

பெல்சிய அரசாங்கம் அளித்த இந்தப் பதிலைக் கண்டு பெல்சிய மக்கள் அளவுகடந்த மகிழ்ச்சிக்கு ஆளாயினர். பெற்ற விடுதலையைப் பேணிக் காப்போம் என உறுதி பூண்டனர். இவற்றையெல்லாம் அறிந்த மன்னன் அளவுகடந்த சினத்திற்காளானான். தனது புதல்வன்மீது வெறுப்புக்கொண்டான். "உனக்குப் பின்னால் அரியாசனத்தில் பெல்சிய விடுதலை வீரன் டி-போட்டரை அமர்த்தினாலும் அமர்த்துவேனே தவிர, ஆரஞ்சு இளவரசனை அமர்த்தமாட்டேன்" எனக் கடுமொழி கூறினான். எனவே ஆரஞ்சு இளவரசன் பெல்சிய கவர்னர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தான். பெல்சிய மக்களின் நலனுக்காகப் பாடுபடத்தான் என்றும் தயாராக இருப்பதாகக் கூறிவிட்டு, அவன் விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்ற இரண்டு நாட்களுக்குள் மேலும் நிலைமையைச் சீர்குலைக்கும் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது பெல்சிய மக்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருந்த கடைசி உறவையும் இந்நிகழ்ச்சி அறுத்தெறிந்தது

செனரல்சேஸ் என்பவனது தலைமையின்கீழ் இருந்த டச்சுத் துருப்புக்களைப் புரட்சிப் படையினர் கடுமையாகத் தாக்கிப் பின்வாங்கச் செய்தனர். புறமுதுகிட்டு ஓடிவந்த டச்சுப்படை ஆன்ட்வெர்ப் நகரக் கோட்டையினுள் புகுந்துகொண்டது. ஏற்கெனவே அங்கு பெரும் டச்சுப் படையொன்றும் துறைமுகத்தில் ஒன்பது டச்சுப் போர்க்கப்பல்களும் இருந்தன. அவைகளுடன் இந்தப் படையும் சேர்ந்துகொண்டது. ஆணவவெறி மிகுந்த செனரல்சேஸ் தனது தோல்விக்குப் பழிவாங்கத் திட்டமிட்டதால் ஆன்ட்வெர்ப் நகரை அழிக்க உறுதி பூண்டான். கரையோரத்தில் நின்ற போர்க்கப்பல்களின் பீரங்கிகள் இடைவிடாது இரவு முழுவதும் ஆன்ட்வெர்ப் நகரைச் சுட்டன. நகர் முழுவதும் பற்றி எரிந்தது. புரட்சிக்காரர்களும் வீராவேசத்துடன் எதிர்த்துப் போரிட்டனர். எனினும் டச்சுப் படைகளின் கையே மேலோங்கி இருந்தது. ஆயிரக்கணக்கான பாமரமக்களை டச்சுப் படைகள் சுட்டுக்கொன்றன. இரத்தம் வீதிகளிலே பாய்ந்தது. தெருவெங்கும் பிணங்கள் சிதறிக் கிடந்தன. விடுதலை வேண்டிப் போரிட்ட பெல்சிய மக்களை இறுதி முறையாக டச்சுக்கரர்கள் பழி தீர்த்துக்கொண்டனர். என்றாலும் பெல்சிய மக்களின் விடுதலை வேட்கையை அழிக்க அவர்களால் இயலவில்லை. ஆன்ட்வெர்ப் நகரத்தில் பெருக்கெடுத்தோடிய குருதியாறு பெல்சிய மண்ணில் இருந்து டச்சு ஆதிக்கத்தை அடியோடு கழுவியது.

1830-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4-ம் நாள் விடுதலைப் பிரகடனத்தைச் சுதந்திர அரசாங்கம் வெளியிட்டது. அந்த ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ம் நாளில் கூடிய வல்லரசுகள் மாநாட்டில் பெல்சிய சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை 129 ஆண்டுகளாக பெல்சிய விடுதலைக்கொடிய உலக அரங்கில் பட்டொளி வீசிப பறந்துகொண்டிருக்கிறது.

86½ இலட்சம் மக்களைக்கொண்ட சின்னஞ்சிறு நாடான பெல்சியம் தனித்து வாழுகிறது. தனிநாடு என்ற மதிப்புடன் ஐக்கிய நாடுகள் சபையில் அமர்ந்திருக்கிறது. ஆனால் பத்துக்கோடி திராவிடர்களைக் கொண்ட திராவிடம் இன்னும் ஆமைபோல அடங்கி ஒடுங்கி வாழுகிறது.

கேரளத்தைவிடப் பரப்பளவில் சிறியதும், தமிழகத்தின் பரப்பளவில் நான்கில் ஒரு பகுதிக்குக் குறைவானதும், திராவிடத்தின் பரப்பளவில் இருபத்தொன்றில் ஒரு பகுதிக்குக் குறைவான பரப்பளவைக் கொண்டதுமான பெல்சியம் இன்னும் தனித்து வாழுகிறது.

ஒருபுறம் வல்லரசான பிரான்சு, மற்றொருபுறம் வலிமை படைத்த செர்மனி, இன்னொருபுறம் ஆதிக்க வெறிபிடித்த ஆலந்து இவைகளுக்கிடையே விளங்கும் இச்சிறு நாட்டில் தனிக்கொடி கம்பீரமாகப் பறக்கிறது. தனி இனமாக விளங்குவதற்குரிய இலக்கணம், தனித்த பண்பாடு, வரலாறு, மொழி இவைகளைக் கொண்டிராத பெல்சியம் தனி நாடாகத் திகழுகிறது. பண்டு தொட்டுப் பெருமைபெற்ற தேசிய இனமாகத் திகழ்ந்து, புகழ் படைத்த வரலாறு, போற்றற்குரிய பண்பாடு, சீரிளமைத்திறன் குன்றாத மொழியமைப்பு இவைகளைப் பெற்றுத் தனித்தன்மை காட்டித் திகழும் திராவிடம் அடிமையாகத் தேய்புகிறது.

பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று டச்சு ஆதிக்கப்பிடியில் சிக்கிச் சீரழிந்த பின்னர் பிரிவினை உணர்ச்சியை பெல்சியர் பெற்றனர். ஆனால் வெள்ளையர் பிடியிலிருந்து விடுபட்டு வடவர் பிடியில் சிக்கிச் சீரழியும் திராவிடர் விடுதலையுணர்ச்சி பெறுவது எப்போது?

"ஹேக் நகரிலிருந்து கொண்டு ஆள இவர்கள் யார்?" என அதட்டிக் கேட்டனர் பெல்சியர். ஆனால் எதற்கெடுத்தாலும் டெல்லி நோக்கிக் காவடி தூக்குகிறான் திராவிடன். டச்சு மொழிக்கு இங்கு ஆதிக்கமா எனச் சீறி எழுந்தனர் பெல்சியர். திராவிடத்தின் சகல துறைகளிலும் இந்தி ஆதிக்கம் நுழைந்த பின்னரும் ஏன் என்று கேட்பாரில்லை.

டச்சு அரசாங்கம் பட்டுள்ள கடனைக் கழிக்க பெல்சியருக்கு வரிச்சுமையா எனத் தட்டிக் கேட்டான் பெல்சியன். வடக்கு வளர வகை வகுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற ஏழைத் திராவிடன் காசைக் கொட்டி அழவேண்டிய அவலநிலை ஏன் எனச்சிந்திப்பாரில்லை. வஞ்சிக்கப்பட்ட திராவிடம் பெல்சியம்போல வீறுகொண்டெழுவது எப்போது? ★

சிரிக்கும் எம். ஜி. ஆர்.!



அண்மையில் உடல் நலம் பெற்றுத் திரும்பவும் கலைப்பணிகளில் பங்கேற்றுக்கொண்ட புரட்சிநடிகர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 22-11-'59 அன்று எழுத்தாளர்களுக்குத் தமது ராமவரம் மாளிகையில் ஒரு மகிழ்ச்சி விருந்தளித்தார். விழாவில் எழுத்தாளர்களுக்குத் தன் நன்றியையும் எண்ணத்தையும் தெரிவித்துக்கொண்டார் எம். ஜி. ஆர்.

விழாவில் திரு. "சாண்டில்யன்" பேச்சைக் கேட்டு மனம் விட்டுச் சிரிக்கும் எம். ஜி. ஆரையும், அவரைக் குணப்படுத்திய டாக்டர்கள் திரு. எம். நடராசன் அவர்களையும் திரு. பி. ஆர். சுப்பிரமணியம் அவர்களையும் படத்தில் காண்க.

டாக்டர்கட்கு நம் நன்றி. புரட்சி நடிகர்க்கு நம் வாழ்த்துக்கள்! வாழ்க! வாழ்க!

★

நெஞ்சு களிக்கும் வரவேற்பு.

அண்மையில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களுக்கு வடார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூர் நகராட்சியினர் ஒரு வரவேற்பளித்தனர். எஸ். எஸ். ஆர். அவர்கள் வரவேற்பிதழைப் பெறுவதையும், நடிகமணி டி. வி. என். அவர்கள் அருகிலிருப்பதையும் படத்தில் காண்க.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

''வீராதி வீர''ருக்கு அருப்புக்கோட்டையில் ஏற்பட்ட தோல்வியின் கலக்கம் சென்னையில் எந்தக் குழப்பத்தையாகிலும் செய்யத் தூண்டியிருக்கலாம். அதனால்தான் சொல்லத் தகாதனவெல்லாம் செய்து முடித்திருக்கின்றனர். என்றாலும் மாநகராட்சித் தலைவர் தேர்தல் முடிவு திராவிடத்தார் களிக்கும் வண்ணம் அமைந்துவிட்டது. ஆம்! ஆம்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர் - தோழர் எம். எஸ். அப்துல்காதர் பி. எஸ்சி. மாநகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கழகத்துக்காக, அப்துல்காதர் அவர்கள் பட்ட துன்பங்களும் ஆற்றிய தொண்டுகளும் அளவிறந்தன. தொண்டுள்ளம் கொண்ட எவரையும் விட்டு வைக்காத காங்கிரசாட்சியினர், இவரைக் கடந்த ஆண்டு சிறையிலடைத்தனர். வெளியிலிருந்தால் கட்டாயம் நேருவுக்குக் கருப்புக்கொடி பிடித்தே தீர்வார் இவர் என்ற அச்சத்தால்தான் பண்டிதர் வருவதற்கு முன்பே இவரைக் கைது செய்தனர். என்றாலும் நீதி வென்றது; அப்துல்காதர் அவர்கள்மீது கணை தொடுத்த ஆட்சியாளர் தலை கவிழ்ந்தனர்.

★

தேவராசன் அவர்கள் தொண்டருக்குத் தொண்டர். இரவென்றும் பகலென்றும் பாராது அலைந்து அலைந்து ஏழைகளின் துயரம் துடைப்பவர். கழகத்தின் கட்டளைகளை அணுவும் தவறாமல் நிறைவேற்றி முடித்திடுபவர்.

இருவரும் இதயம் மகிழும் வெற்றியை ஈட்டித் தந்திருக்கின்றனர். இருவருக்கும் நம் வாழ்த்துக்கள். வாழ்க! வாழ்க!

இந்த வெற்றியை ஈட்டித்தர அல்லும் பகலும் அயராதுழைத்த அனைவருக்கும் நம் பாராட்டு உரித்தாகுக.

★

பொறுப்பேற்றிருக்கும் தோழர்கள்முன் பல புதிய பொறுப்புக்கள் தலை காட்டுகின்றன! வளர்ந்துவரும் நகரின் தேவைகளும் வளர்ந்து வருகின்றன. இதனை நாம் மட்டுமல்ல. நம் இயக்கம் சாராத பிற இயக்கத்தோரும் ஒப்புகின்றனர். ஒன்பது ஆண்டுகளுக்குமுன் நாடறிந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் பல அரிய கருத்துக்களை, சென்னை மாநகராட்சியைப் பற்றி எழுதும்போது தெரிவித்துள்ளார்கள். ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும் அந்தக் கருத்துக்கள் இன்றைய நிலைக்கும் பொருந்துவனவாகவே இருக்கின்றன.

கேளிக்கை வரியில் சென்னை மாநகராட்சிக்குச் சரியான பலன் கிடைப்பதில்லை என்று ஏற்கனவே கூறியுள்ளோம்; எழுதியுள்ளோம். என்றாலும் ''மிஸ்டர் மதராஸ்'' அதைக் கவனிப்பதில்லை. இதே கருத்தை திரு. பி. வி. செரியன் அவர்கள் அக்கட்டுரையில் இப்படிக் குறித்துள்ளார்:

''வருமான இனங்களில் அடுத்த படியாகத் தமாஷா வரியைக் குறிப்பிட வேண்டும். இதிலும் பத்து சத விகிதத்தைச் சர்க்கார் தங்கள் சொந்த நிர்வாகச் செலவுகளுக்காக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். இந்த நிர்வாகப் பொறுப்பையும் கார்ப்பொரேஷனுக்கே திருப்பிவிட்டால், நிர்வாகச் செலவை மட்டுப்படுத்திப் பார்க்க முயற்சி செய்யலாம்.''

அடுத்த பிரச்னை சாலை—பராமரிப்பு ஆகும். சாலைகளினால் வரும் வருமானம் அனைத்தையும் மாநில அரசினரே பெறுகின்றனர். எனினும் சாலைகளைப் பராமரித்து வரும் மாநகராட்சியினருக்கு, சரியான மானியத்தையோ, பங்கையோ சென்னை மாநில அரசு தருவதில்லை. இதை நாமும் முன் குறிப்பிட்டிருக்கிறோம். டாக்டர் பி. வி. செரியன் நம்மியக்கத்தவரும் அல்லர்; அரசியல் காழ்ப்புக்கு இரையானவருமல்லர். அவர்கள் சாலை—பராமரிப்புப்பற்றித் தம் கருத்தைத் தெரிவிப்பதைக் காண்க:

''இப்போது சர்க்கார் பஸ் போக்குவரத்தை நகரத்தில் விசேஷமாக விஸ்தரித்திருக்கிறார்கள். அதனால் நகரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளுக்கும் புதிய புதிய பாதைகளில் பஸ்கள் செல்லுகின்றன. அந்த ரஸ்தாக்களைப் பழுது பார்த்து நல்ல நிலையில் உயர்ந்த முறையில் வைத்திருப்பதற்கு அதிகச் செலவு ஆகிறது. பொதுவாகவே முன்னைக்கு இப்போது வண்டிகள் போக்குவரத்தும் அதிகமாகியிருக்கிறது. இவைகளினால் லைசென்ஸ்மூலம் சர்க்காருக்கு எதேஷ்டமான வருமானம் கிடைத்தும்கூட, கார்ப்பொரேஷனுக்கு அவர்கள் அளிக்கும் பங்கு சொற்பம் என்றே கூறவேண்டும்.''

நாம் பிரயாண வரியைக் கொண்டு வருவதுபற்றிப் பேசியபோது சீறி எழுந்தவர்கள் சிந்தைக்கு வேலை தரும் மற்றொரு குறிப்பையும் அவர் தருகிறார்:

''எப்படியும் நகர சபையின் வருமானத்தை நியாயமான முறைகளில் உயர்த்தி, பொதுஜன வசதிகளை அதிகப்படுத்தி, புதிதாக இணைக்கப்பட்ட பிரதேசங்களையும் நகரத்திற்கு சமமான நிலையில் கொண்டுவந்து வைக்க, சர்க்காருடைய நேரடியான சகாயம் கட்டாயம் தேவையாகிறது. பம்பாய், டில்லி, கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில், 'டெர்மினல்' வரி, 'ஆக்ட்ராய்' வரி என்று வசூல் செய்கிறார்கள். வெளியூரிலிருந்து நகரத்திற்குள் வருபவர்களிடம் வசூலிக்கப்படும் வரிகள் இவை. இந்த வரிகளை சென்னை நகரசபையும் விதிக்க இதுவரை அனுமதிக்கப்படவில்லை. அதனால் சென்ற ஐந்து வருஷங்களாகச் சென்னைக்கு வருஷந்தோறும் சுமார் ஐம்பது லக்ஷ ரூபாய் வரை வருமான நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று கூறுவது மிகையாகாது.''

சென்னையில் இவ்வரி விதித்தால் ஏழைகள் இன்னலுறுவர் என்று முதலைக் கண்ணீர் வடித்த ''தகர முரசுகள்'' இதற்கென்ன பதில் சொல்லப் போகின்றனவோ?

எனவே, புதிய மேயர் அவர்களும் துணை மேயர் அவர்களும் ஒல்லும் வழியெல்லாம் செயல்பட்டுப் புதிய நகரை உருவாக்க முனைகின்றனர். இதற்கு மாநில அரசினர் தமது முழு ஒத்துழைப்பையும் தர வேண்டியது மக்களாட்சிப் பண்பாகும். இதில் தவறினால் அவர்கள் ஒரு பெரிதான பழிக்கு ஆளாகின்றனர் என்றே பொருள். இதையும் டாக்டர் திரு பி. வி. செரியன் அவர்கள் எழுத்தின் மூலம் கூறுகிறேன்:

''மிக முக்கியமான சேவைகள் செய்துவரும் சர்க்காரின் ஓர் அங்கமாக நகரசபையும் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கேற்ற முறையில் வருமான மார்க்கங்களும் வகுக்கப்பட வேண்டும். இன்றேல், நகரசபை அதன் கடமைகளைச் செய்வது சாத்தியமாகாது என்பதுடன், இப்பொழுது செய்துவரும் வேலைத் தரத்தையும் அதிக காலத்திற்கு நிலைத்திருக்கச் செய்வதும் அசாத்தியமாகும்.''

மேயர் அப்துல்காதர் வாழ்க! வாழ்க!

துணை மேயர் தேவராசன் வாழ்க! வாழ்க!

—மா. பா.

"கல்வி"
ஆங்கிலம் எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும், படிக்கவும் பேசவும் ஒரே வருடத்தில் தபால்மூலம் கற்றுக் கொடுக்கப்படும். மாதம் ரூ. 2.
விபரங்கள் இலவசம்.
தி நியூ கல்வி அசோசியேஷன்,
திருப்பூர்.
(கோவை மாவட்டம்)

பொம்மைகளில்லை;
பொருளே நிறைந்திருக்கும்.
"தென்றல்"
பொங்கல் மலர்
1960.
பொறுப்பாளர்,
"தென்றல்"
சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சு.ப. அருணசலம். ஏ. எல். எஸ். அச்சகம். 2/127. மவுண்ட்ரோடு. சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.